நூலகம்

இலக்கியம்

மலர் 1
இதழ் 9
மே, 1996

ஆசிரியர் :
நூலக ஞானி டாக்டர் பா. பெருமாள் M.A., M.Lib., Sc., Ph.D.,



நுண்ணறிவு மிக்க நூல் அறிஞர். தமிழக முதலமைச்சர் **டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி.** புதியதோர் புத்தக உலகம் செய்வோம்!
தமிழ் நூலக உணர்வு மிக்க நூலக இயக்கம் காண்போம்!!

நூலக ஞானி டாக்டர் பா. **பெருமாள்** - திருமதி **இந்திரா** மணிவிழா காட்சிகள்

நூலக ஞானி டாக்டர் பா. **பெருமாள்** - திருமதி **இந்திரா** மணிவிழா காட்சிகள்.

நல்ல காலம் பிறக்குது!

தமிழக நூலக இயக்கத்திற்கு,
முன்பு எப்போதையும் விட,
இன்று, தமிழ் உணர்வு
அதிகம் தேவைப் படுகிறது.

நூலக இயக்கம்
நூலகச் சங்கம்
நூலகக் கல்வி
நூலகச் சேவை
நூலக இலக்கியம்
நூலகப் பருவ ஏடுகள்
இன்னும் பல ... துறைகளில்
தமிழே என்ற நிலை
உருவாக வேண்டும்

தமிழ் வழி நூலகக் கல்வி
பயின்றோருக்கு மட்டுமே
தமிழ் நாட்டில், வேலையில்
முன்னுரிமை தரப்படவேண்டும்.

இன்று விட்டால், பிறகு
என்றும் நல்ல காலம் பிறக்காது.

தமிழக முதல்வர், கல்வி அமைச்சர்
பண்பாட்டுத் துறை அமைச்சர்
முதலியோரின் கடைக் கண்பார்வை
கிட்ட வேண்டும்!

உயிர் தமிழ் நூலகப் பணிக்கு!
உடல் மண்ணுக்கு - தீ நாக்குக்கு!!

- நூலக ஞானி

நூலக ஞானி டாக்டர் பா.பெருமாள் மணிவிழா 9.5.1996

வாழ்த்துப்பா : டாக்டர் பூவண்ணன்

பிறந்த நாள்ஒரு சிறந்த நாளாம்!
பிரியமாய் ஒருத்தியை மணந்த நாளும்
பெருமைக் குரியதே! பெயர்சொலத் தக்க
அருமைக் குழந்தையின் அப்பா ஆகும்
அந்த நாளும் வந்தனைக் குரியதே!
பெற்ற குழந்தைகள் பெரியவ ரானதும்
உற்ற துணையைத் தேடித் தேர்ந்து
பெற்றுத் தந்திடும் பிள்ளைகள் மணநாள்
மற்றுமோர் திருநாள்! பிள்ளைகள் பயந்த
பேரன், பேத்தியாய் பிறக்கும் தாத்தா
பேரைப் பெறும்நாள் சீருடை நாளே!
இத்தனை நாட்களின் சிறப்பை இணைப்பினும்
ஒத்திட முடியா உயர்வுடை ஒருநாள்,
ஆண்டுகள் அறுபது வாழ்வாங்கு வாழ்ந்து
அறிவும் அனுபவ முதிர்வும் அடைந்து
மணிவிழா காணும் மாபெரும் நாளாம்!

மனைவியை மீண்டும் மணந்திடும் சீரொடு
மக்களே பெற்றோர் மணத்தை நடத்தும்
தக்கதோர் சிறப்புடை தனிப்பெரும் நாளாம்!
மனத்துக் கினியவர் மணிவிழா காண்கிறார்.
கனிவும் கருணையும் துணிவும் துணையாய்
அணிந்தவர், என்பால் அளவிட முடியா
அன்பும் நண்பும் அருளும் உடையவர்,
பெருமாள் என்னும் பெருமைக் குரிய
திருப்பெயர் தாங்குநர்; திருமால் பக்தர்.
பார்த்த சாரதி பயந்த பிள்ளை
சீர்த்த மதியினர்; செம்மையர்; சிறந்தோர்!
திருக்கோ யிலூரின் அருகே அமைந்த
மெய்யூர்க் காரர்! பொய்யூர் போகார்!
முப்பத்து மூன்று ஆண்டுகள் முன்நான்
சந்தித்த நண்பர்! முதல்நாள் முதலே
எங்கள் நட்பு செங்கரும் பினிப்பு!
சென்னை வாழினும், கோவை மாறினும்
என்னை அவரோ, அவரை யானோ
மறந்தறி யாத மாசிலா நட்பு!
மாற்றரும் பொன்அவர்! மாணிக்க மணிஅவர்!
ஏற்றிட்ட பணிக்கு ஏற்றம் தருபவர்!
என்னரும் நண்பர் இனிமையின் இமயம்!

பன்னரும் நலத்தர்! பால்போல் தூயவர்!
'பெருமாள் என்நண்பர்' என்பது எவர்க்கும்
பெருமை சேர்ப்பது! பிழைகள் தீர்ப்பது!

கல்வியில் சிறந்தவர் பல்கலைப் பெருமாள்!
நூலக இயலை ஆழமாய்க் கற்றவர்!
நூலகர் பணியில் தனிப்புகழ் பெற்றவர்!
முதுநிலை பட்டம் பெற்றதன் பின்னே
அடியேன் நூல்களை ஆய்வு செய்து
முனைவர் பட்டமும் உற்றவர்; உழைப்பவர்!
நூலகத் துறைக்குச் சேவைகள் செய்து
'நூலக ஞானி' விருதும் வென்றவர்.
நூலகத் தந்தை ரங்க நாதனின்
பாதையில் செல்பவர்! பனிமொழி சொல்பவர்!
'நூலகம் இலக்கியம்' என்னும் இதழை
ஞாலம் போற்ற நடத்தும் சீலர்!
மணிவிழா காண்கிறார்! மனமார வாழ்த்துவோம்!

தங்க மனத்து நண்பர் பெருமாள்
கொங்கு நாட்டு மங்கையாம் இந்திரா
செங்கை பற்றிச் சீரொடு வாழ்கிறார்!
வெங்கடேஷ், சத்யன், விஜய லட்சுமி,
ராதை பெயரின் கோதை என்னும்
மக்களைப் பெற்றவர்! மனக்குறை இல்லை!
தக்க வாழ்வு! தனக்குறை இல்லை!
பெருமாள் வாழ்வு பெறற்கரும் வாழ்வு!
பெருமாள் உள்ளம் பெறாதது கள்ளம்.
பெருமாள் இல்லம் பேரின்ப வெள்ளம்.

உதவும் கரமும் உருகும் குணமும்
எதையும் தாங்கும் எஃகு மனமும்
இணைந்த பெருமாள் இணையிலாப் பெரும் ஆள்!

மணிவிழா மாப்பிள்ளை பெருமாள் வாழ்க!
மணமகள் இந்திரா மாதும் வாழ்க!
குணமுயர் பிள்ளைகள், பெண்கள் வாழ்க!
குடும்பம் முழுதும் வாழ்க! வாழ்க!
மணிவிழா நாயகர் சுற்றமும் நட்பும்
இனிதாய் வாழ்க! என்றும் வாழ்க!
வாழ்க பல்லாண்டு! வளமுடன் வாழ்கவே!

நூலக ஞானி டாக்டர் பா. பெருமாள், டாகுமெண்டேஷன் ஆபீஸர், ராஜ்பவன், கிண்டி சென்னை _ 600 022. (1996) மணிவிழா சென்னை _ 106_இல் 9.5.1996, சுற்றமும் நட்பும் கொண்டாடியது.

கடிதங்கள்

தம்பி ஸ்ரீநிவாசன் 17.5.96
எப் 63 பி ஹரிநகர்,
புது தில்லி 110 064

அன்புடையீர் வணக்கம். நல்வாழ்த்துக்கள். இது நாள் மணிவிழா நன்கு நடைபெற்றிக்கும். பம்பாயிலிருந்து நான் அனுப்பிய வாழ்த்துத் தந்தி வந்திருக்கும்.



ஏப்ரல் நூலம் இலக்கியம் கிடைத்து அனுபவித்தேன். புரொபஷனிலிசம் தெரிகிறது. தகுந்த துணை இல்லாமையும் தெரிகிறது. (சிறப்பான நூலகர் துறை என்று பெண்கள் பற்றிய கட்டுரையில் அவர்கள் பெயரை விசாரித்து எழுதுவோம் என்று தாங்கள் புள்ளியிட்டு வைக்க அந்தப் புள்ளியின் இறுதியச்சு வரை நின்றுவிட்டது ஒரு உதாரணம்.

திருமண நாள் புகைப்படமும் இன்றைய படமும் கண்டு ரசித்தேன். தங்கள் அழைப்பே புதுமையானதாயும் நிறைவாயும் இருந்தது.

தங்கள் உள் வட்டத்தில் எனக்கொரு இடம் இருப்பது அறிய மகிழ்ச்சி. டாகுமெண்டேஷன் கட்டுரைபோல இதழ் தோறும் வரட்டும்.

புத்தக நண்பன் புத்தகச் செய்தி

சிறுவர் இலக்கியச் செம்மல் திரு. தம்பி ஸ்ரீநிவாசன் அவர்களின் பொருள் பொதிந்த புத்தகச் செய்தி தகவல்கள் ஜூன் 1996 நூலகம் இலக்கியம் இதழிலிருந்து தொடர்ந்து வெளிவரும்.

கரை ரான்கள் வந்து போகும்
உணவுவிடுதி புத்தக அலமாரி.

பக்கம் 2. மாலைமலர். சென்னை, 24.2.1996

கடிதம் 2

அன்புடையீர், வணக்கம்.

நூலகம் இலக்கியம் இதழ் 8 கிடைத்தது. நேற்று சிற்றிலக்கியச் செய்தி 21 அனுப்பியிருந்தேன்.

இதழின் பின் அட்டையில் 59ல் தாங்கள் (கல்லூரி விரிவுரையாளர்போல), 93ல் தாங்கள் (பழுத்த முதிர்ந்த தோற்றத்தில்), முன் அட்டையில் சோலை இருசன் (சங்கொலி ஆசிரியர் போல) கருப்புக் கண்ணாடியுடன் தோற்றம் கண்டு மகிழ்ந்தேன். உள்ளம் வயது 16 : உடல் வயது : 61. சரிதான் என்று என்னுள் தோன்றியது. தொடர்க.

கன்னிமாரா நூலகம் .....பொது.....பொது நூலகம்தான். டாக்குமெண்டேஷன் கட்டுரையை படித்ததும் "படிப்பும் பயன்பாடும்" என்று கட்டுரை எழுதவேண்டும் என்று தோன்றியது. நேரம் கிடைத்ததும் எழுதி முடிக்கிறேன். நலம்தானே.

என்றுடம் அன்புடன்,
பொள்ளாச்சி நசன்

1, சம்பத்நகர், சூளேஸ்வரன்பட்டி, பொள்ளாச்சி 642 006.
8.5.1996

கடிதம் 3

கண்ணாடி + ஊஞ்சல் + உற்சவசேவை சென்னை
7.5.96

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு வணக்கம் ஏப்ரல், 96 'நூலகம்' கிடைக்கப் பெற்றேன். மிக்க மகிழ்ச்சி.

'கண்ணாடி + ஊஞ்சல் + உற்சவ சேவை', பகுதியின் மூலம் தங்களுக்கு அகவை 61 என்று அறிந்து மிகவும் ஆனந்தம் கொண்டேன்; அகவை 61 லும் தாங்கள் அயராது தமிழ்த்தொண்டு ஆற்றுவது குறித்து!

இல்லத்தரசியுடன் இணைபிரியாது வாழும் தாங்கள் மேலும் நீடூழி வாழ என் வாழ்த்து. இதே போன்று அறிமுகமில்லாத 61 தம்பதியர்களுக்கும் என் உளங்கனிந்த வாழ்த்துக்கள்.

தங்கள் தொண்டும் தங்கள் துணைவியாரின் அன்பும் என்றென்றும் நிலைத்திருக்க வாழ்த்தும்

அன்பன்

முத்து எத்திராசன்

128, காமராசர் குடியிருப்பு, தெற்கு உஸ்மான் சாலை,
தியாகராய நகர், சென்னை 600 017.

கடிதம் 4

5.5.96

Dr. PREMA NANDAKUMAR M.A., Ph.D.
"MUDAL TIRUMALIGAI"
91, SOUTH CHITRAI STREET,
SRIRANGAM, TIRUCHIRAPALLI - 620 006.
Phone : 432959

அன்புள்ள திரு பெருமாள் அவர்களுக்கு,

நமஸ்காரம். டிசம்பர்'95 இல் புத்தகக் கண்காட்சியில் சந்தித்தோம். நூலகம் செய்தி மாத இதழ்கள் சில கொடுத்தீர்கள். நல்ல சேவை செய்கிறீர்கள். தமிழ்ப் பத்திரிகைகள் நூல் விமரிசனங்களை பெருமளவில் அளிப்பதில்லை. அதனால் இன்றைய புத்தக உலகில் என்ன நடக்கிறது என்று கூடத் தெரியவில்லை. நூலகம் மூலம் நல்ல வெளியீடுகள் பற்றித் தெரிந்து கொள்ள முடிகிறது. நன்றி.

அன்புடன்

பிரேமா நந்தகுமார்.

திரு பா.பெருமாள்
ஆசிரியர், நூலகம்
சென்னை.

பழங்கால எழுத்துக்கள்

கிருஸ்துவுக்கு முன் (கி.மு.) 4 ம் நூற்றாண்டிலேயே எழுத்துக்கள் உபயோகத்தில் இருந்திருக்கின்றன. எகிப்து எழுத்துக்களில் எழுதிய பேப்பிரஸ் ஏடு ஒன்று, இன்னும் பாரீசில் உள்ள பிப்ளியோதேக் நேஷனல் என்ற தேசிய புத்தக சாலையில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

கொஞ்சமாவது விவரம் தேவை

''இந்தியாவின் மிகப் பெரிய அரசுப் பதிப்பகம் என்ற பெருமைக் குரிய 'பப்ளிகேஷன் டிவிஷன்' நிலையத்துக்குப் போய் ஒரு நூலின் பெயரைச் சொல்லி விசாரித்தேன். அப்படி ஒரு புத்தகம் வெளி யிடவே இல்லை என்று சாதித்தார்கள். 'நான்தான் அதன் மொழி பெயர்ப்பாளன்' என்ற பிறகு முல நூலின் பெயரைக் கேட்டார்கள்.



தம்பி சீனிவாசன் (''டி. எஸ். வி'')

ஒரு புத்தகம் வாசகனுக்காக எழு தப்படுகிறது, தயாரா கிறது, நல்ல வாச கன் நல்ல புத்த கத்துக்காக ஏங்கு கிறான். திருமணத் துக்காகத் தயாராக இருக்கும் பெண் ணையும் பிள்ளை யையும் போல.

எத்தனையோ நிகழ்ச்சி களைப் பற்றிய செய்திகள் பரவுவது போல புத்தகச் செய்திகள் பரவுவது இல்லை.

அரசியல் செய்தியும் சினிமாச் செய்தியும் நிகழ்ந் தவை மட்டுமல்ல, நிகழ உள்ளவை, தயாரிப்பில் உள்ளவை, திட்ட அளவில் உள்ளவை, எண்ண அளவில் இருப்பவை - என்று எல்லாமே செய்திதான். ''இந்தப் படத்தில் நடிக்க இருந்தவர் மனம் மாறிவிட்டார்'', ''குமாரி 'சாதா'வுக்குப் பதில் குமாரி 'படா' அட்வான்ஸ் வாங்கினார்'' - என்பதெல்லாம் பரபரப்பான செய்தியாகிறது.

சமூக வாழ்வில் இன்று, நமது ஊர்களில் ஏனோ கல்வியும் படைப்புக் கலையும் அதில் ஈடுபட்டுள்ளவர்களும் போதிய அளவு

கவனிக்கப்படுவதில்லை. இவை செய்திகளாகின்றன. எப்போதாவது அரசியல் கலக்கும் போது, விபத்தோ, பதவித் தகராறோ நேரும்போது தானா கல்வி நிலையங்கள் செய்தியாக வேண்டும்? கழுத்திலே கத்தி தொங்கும் போதுதானே எழுத்தாளர் சல்மான் ருஷ்டி செய்தி முக்கியம் பெறுகிறார்? நாட்டின் தலைசிறந்த கவிஞரும் எழுத்தாளருமாகக் கருதப்படுவோர் அதற்கான விருதுபெறும் விழாக்களுக்கு வரும் போதும் திரும்பும்போதும் வாகன வசதியோ, வழித் துணையோ இராது நிற்பதைப் பார்த்ததுண்டு. ஆனால் இப் போது புத்தகச் சிந்தனை இதைப் பற்றியன்று.

புத்தகச் செய்தி என்பது குறைந்த பட்சம் வெளியான புத்தகத்தைப் பற்றிய விவரத் தொகுப்பாக இருக்க வேண் டும். இந்த அடிப்படைத் தகவல் கூட பல புத்தகங்களுக்குத் தயாராவதில்லை. இதற்குக் காரணம் பெரும்பாலும் பதிப் பாளரின் அக்கறையின்மை தான். பதிப்பாளரும் விற்பனை யாளருமான அவர், தமது நூல் விவரப்பட்டியலை அக்கறை யோடும் ஆசையோடும் தயாரிப்பதில்லை. கல்யாண மளிகைச் சாமான் பட்டியல் போலத்தான் புத்தகப் பட்டி யல் அச்சாகிறது. இதனால் யாருக்கு என்ன பயன் என்று தெரியவில்லை.

ஒரு புத்தகத்தில் பெயரும் அதன் விலையும் மட்டுமே காணும் இந்தப் பட்டியல் மளிகைப் பட்டியலைவிட மட்ட மானது என்பேன். மளிகைப் பட்டியலிலாவது ஒரு பொரு ளின் அளவு குறிக்கப்பட்டி ருக்கும் - இத்தனை கிலோ அரிசி, இத்தனை லிட்டர் எண்ணெய் என்று. சில பதிப்பாளர்களின் பட்டியலில் நூலாசிரியர் பெயர்கூட இராது, வெட்கக்கேடு.

குறைந்த அளவு விவரம் என்றால் ஒரு புத்தகம் எதைப் பற்றியது, யார் எழுதியது, எப்போது வெளியானது, எத் தனை பக்கம், என்ன விலை என்பதாவது தெரியவேண்டும்.

வெறும் மொட்டையாக ''சிவப்பு ரோஜாப் பூ - ரூ. 15'' என்றால் போதுமா? இது நாவலா, கவிதையா, ஒரு வேளை சிறுவர் நூலா, அல்லது தோட்டக் கலை சம்பந்தமானதா என்றெல்லாம் தெரிவிக்காமல் இருந்தால் என்ன ஆகும்? விலைப் பட்டியலைப் பார்த்து, தோட்டக்கலையில் ஆர்வமுள்ள ஓர் அம்மையார் பணம் கொடுத்துப் புத்தகத்தை வர வழைத்துக் கட்டைப்பிரித்த பின், ''இது இவ்வளவுதானா? குழந்தைப் பாடலை யார் கேட்டது?'' என்று எரிந்து விழலாம், புத்தகத்தை வீசி எறியலாம்!

எதற்கு இந்த வம்பு? பதிப்பாளர் தமது பட்டியலில் குறைந்தபட்ச விவரங்களைக் கொடுத்திருந்தால் வேண்டாத சாபங்களைப் பெறவும் வேண்டாம்; இவ்வாறான புத்த கங்களை மட்டும் வேண்டு வோருக்கான விற்பனையை இழக்கவும் வேண்டாம்!

விற்பனைக்கான விலைப் பட்டியலைக்கூட விவரமாகத் தயாரிக்காத நம்மவருக்கு அமெரிக்க நூலகத்தினர் அனுப்

பும் 'புதிதாகச் சேர்ந்துள்ள நூல்கள்' என்னும் மாதாந்திரப் பட்டியல் ஒரு முன்னுதாரண மாக இருக்கும். புத்தகத்தில் பெயரோடு, நூலாசிரியர் விவரம், பக்கங்கள், வெளிவந்த ஆண்டு, தவிர ஐந்து முதல் பதினைந்து வரிகளில் புத்த கத்தைப் பற்றிய உள்ளடக்க அறிமுகம் கச்சிதமாகக் கிடைக்கும் இந்தப் பட்டியலில். இதில் இராத ஒரே விவரம் புத்தகத்தின் விலை! இது விற் பனைக்காக அல்ல என்பதால்.

பிராந்திய மொழிப் பதிப்பாளர்களின் பொருளாதார நிலை விவரமான (இலவசப்) பட்டியல் தயாரிக்க இடமளிப்ப தில்லை. பாவம். குற்றம் சொல்ல வேண்டாம். அரசினர் ஆதரவுடன் இயங்கும் நிலை யங்கள் நல்ல முன்மாதிரியான பட்டியல்கள் வெளியிட்டால் என்ன? தில்லியில் பல மொழி களில் புத்தகம் வெளியிடும் நிறுவனத்துடன் தொடர்பு இருந்தபோது இதற்காக ஊக் கமுடன் செயல்பட்ட அனுபவம் சுவையானது.

அவர்களது விலைப் பட்டியல் ஆரம்ப ஆண்டுகளில் ஆண்டு அறிக்கைபோல வெளி யான வரிசையில் பட்டியலாக இருந்தது. இந்த விவரம் யாருக்கும் உதவாது, புத்தகங் களை ரகரகமாகப் பிரித்துக் காட்ட வேண்டுமென்று சொன் னதை ஏற்றார்கள். அப்போது ஏதோ சிக்கன நடவடிக்கையாக இன்று தமிழ் நூல் வெளி யிடுவோர் பட்டியல்போலவே ''மளிகைப் பட்டியல்'' ஒன்றை வெளியிட்டார்கள். இதில் ஒரு வேடிக்கை. ஹிந்தி, அசாமி, மலையாளம் என்று பல மொழி நூல்கள் வேறுவேறு பிற மொழிகளில் வெளியாகும் நூல்களில் பட்டியலிலே மூல மொழி எது என்றோ, மொழி பெயர்ப்பாளர் யார் என்றோ குறிப்பிடாமல் பட்டியல் அச்சிட்டார்கள்.

அந்தக் குறையைச் சுட் டிக்காட்டி அவர்களை உணரச் செய்வதற்குப் பல நாளாயிற்று. 'பார்த்திபன் கா ஸ்வப்னா - கல்கி' என்று இருக்கும். இது ஒரு தமிழ்நாவல் என்ற விவ ரம்இராது. ''பகவான் புத்தர் - தாமானந்த கோஸாம்பி'' என்று இருக்கும். இது ஒரு மராத்தி நூல், கா. ஸ்ரீ.ஸ்ரீ.யின் தமி ழாக்கம் என்ற விவரம் இராது. மூல நூலின் பெயரை ஒலி பெயர்ப்பாக ஒரு விவரமாகத் தரவேண்டுமென்று நான் வாதிட்டேன். இந்த நூல்கள் மொழி பெயர்ப்பு ஆவதற்குக் காரணமே அனைத்திந்தியா விலும் எல்லாமொழி இலக்கிய மும் அறிமுகமாக வேண்டும் என்ற நோக்கம்தானே? ஏதாவது தேசீய அளவு கருத்தரங்கிலோ, பல்கலைக் கழகங்களிலோ பல மொழி எழுத்தாளர் இடையே பழகும் போது மூல நூல்களின் பெயர் களும் அவற்றை ஆக்கியோர் பெயருடனே பரவலாக அறியப் பட்டிருக்க வேண்டாமோ? தகழியின் 'செம்மீன்' அந்தப் பெயராலேயே அறிமுகமாக வேண்டும், மொழிபெயர்ப்பில் எந்தப் பெயர் கொடுக்கப் பட்டிருந்தாலும், ''திருக்குறள்'' உருது மொழிபெயர்ப்பில் கூடத் திருக்குறளாகத்தான் இருக்கிறது.

மொழிபெயர்ப்பாளரின் பெயரும் ஓர் அவசியமான விவரம். சில நூல்கள் வெளி

நாட்டிலிருந்தோ, வெளி மொழிப் பகுதியிலிருந்தோ மொழிபெயர்ப்பாகும்போது சிலசமயம் அதன் மொழி பெயர்ப்பாளரைக் கருதி முக்கி யம் பெறுகின்றன. ராஜாஜி மொழிபெயர்த்த ஒரு கதை. பாரதி மொழி பெயர்த்த மாடர்ன் ரெவ்யூ கட்டுரை. தி.ஜ. ரங்கநாதன் மொழி பெயர்த்த வெண்டல்வில்கி விமர்சனம் என்று அறிமுக மாகும்போதே பரவலாகப் படிக்கப் பெறுபவை மூலத்தின் புகழால் மட்டுமல்ல.

இதெல்லாம் கருதி அந்த நிறுவனம் இப்போது விவரமாக, நூல் பெயர், அது மொழி பெயர்ப்பானால் மூல மொழி, மூலமொழித் தலைப்பின் ஒலி பெயர்ப்பு, மூல ஆசிரியர், மொழிபெயர்ப்பாளர், வெளி யான ஆண்டு, பக்க எண் இவற்றோடு விலை எந்த வகை இலக்கிய இனம் என்ற குறிப்போடும் வருகிறது.

ஆனால் எல்லா நிறு வனங்களையும் யார் அணுகுவது? இந்தியாவின் மிகப்பெரிய அரசுப் பதிப்பகம் என்ற பெருமைக்கரிய 'பப்ளி கேஷன் டிவிஷன்' நிலை யத்துக்குப் போய் ஒரு நூலின் பெயரைச் சொல்லி விசாரித் தேன். அப்படி ஒரு புத்தகம் வெளியிடவே இல்லை என்று சாதித்தார்கள். 'நான்தான் அதன் மொழிபெயர்ப்பாளன்' என்ற பிறகு மூலநூலின் பெயரைக் கேட்டார்கள்.

அவர்கள் விலைப்பட்டி யலை வாங்கிப் பார்த்தேன். தமிழ் நூல்கள் என்ற பிரிவிலே நூல்களின் பெயர் ஆங்கி லத்திலே அச்சாகி உள்ளன. ஆங்கில எழுத்தில் மட்டுமல்ல, ஆங்கிலப் பெயர்களிலே "Children's Mahabharata" என்று இருக்கிறதே தவிர ''பாலர் மகாபாரதம்'' என்று இல்லை. ''விஸ்வகி சிரேஷ்ட. லோக கஹானியா'' என்று ஒரு தமிழ்ப் புத்தகமாம்! ''உலகத்துச் சிறந்த நாடோடிக் கதைகள்'' என்று புத்தகத்தின் மேலே எழுதி யிருக்கிறது. கஷ்டம்! ஏதோ அங்கு வேலை செய்வோர் வசதிக்காக அச்சான பட்டியல போல இருக்கிறது. ''அரே பாய், தோ காபி Our Parliament லாவோ''. என்று கத்தும் பைய னிடம் என்ன மொழி என்று கேட்டு ''தமிழ்-மே'' என்று பதில் சொல்ல மட்டுமே வசதி யாக இருக்கும் இந்தப் பட்டியல்கள்! அவ்வளவுதான்.

பல தமிழ் வாரப் பத்திரி கைகளில் அபூர்வமாக வெளி வரும் புத்தக விளம்பரங்களில் கூட இந்தக் குறை தெரிகிறது. காரணம் எத்தனையோ இருக்க லாம்: அவசரத் தயாரிப்பு என்று பல இருக்கலாம். அவற்றுக்கு மேல், 'எல்லாம் இவ்வளவு போதும்' என்னும் மனப் பான்மையும் காரணமாகிறது. 'எதற்காக உழைப்பையும் திறனையும் நேரத்தையும் அதிகம் செலவிடுவது? பலன் என்னவோ ஒன்றுதானே!' என்ற விரக்தியான மனநிலையும் காரணமாகிறது.

நூலக நூல் பகுப்பியல்

குறிக்கோள் (Objectives)

நூலக பகுப்பு முறையின் இயல்பையும் செயல் நோக்கத் தையும்

நூலடுக்கில் நூல்களைப் பொதுவாகவும், துறையினடிப் படையில் சிறப்பாக வும் வரிசைபடுத்தும் முறை பற்றியும் விளங்கிக் கொள் வதே இக் கட்டுரையின் குறிக்கோளாகும்.

முன்னுரை

மனிதன் பகுத்தறிவு வாய்ந்த ஒரு மிருகம், இப்பகுத் தறியும் சக்தியினால், பொருள் களின் தன்மை ஒத்த தன்மை யுடையவை, வேறுபாடு டையவை என இனம் பிரித்தறி கிறான். பொருள்களைப் பகுத தறியும் ஒரு நிகழ்ச்சியாகும். இப்பகுத்தறியும் முறையே பொதுவாக, பொருள்களை ஒத்த இயல்புடையவை வேறு பாடுடையவை எனப் பாகுபடுத் தும் பகுப்பு முறையாகும்.

நூலகப் நூல் பகுப்பு முறையில் நூல்கள் பண்புருவாக கும் அடிப்படை கூற்றினாலேயே (Characteristics) இனம் அறிந்து தொகுக்கப்படுகிறது. இப்பாடப் பகுதி நூலகப் பகுப்பு முறை யின் செயல் நோக்கத்தையும், தேவையையும் விளக்குகிறது. ஆங்கிலத்தில் கிளாசிபிகேசன் (பகுத்தல்) என்ற சொல்லாக்கத் தின் மொழிச் சொல்லான 'கிளாசிஸ்' என்பதிலிருந்து உருவாக்கப்பட்டது. பகுப்பு முறை என்பது, ஒருங்கிணை வான பொருள்களை ஒன்றாகச் சேர்த்துத் தொகுப்பதும் மாற்றுத் தன் மையுடையவைகளைத் தனியே பிரிப்பதும் ஆகும். பொருட் பண்புருவாக்கமே பொருள்களை ஒத்த தன்மை யுடையவை, மாறுபாடு டையவை எனப் பகுத்தறிய உதவும் அடிப்படை கூறாகும்.

மார்கரெட் மேன் (Margaret Maun) என்பவர் நூலகப் பகுப்பு முறை என்பது பொருள் களை ஒருங்கிணைந்தவை, வேறுபட்டவை என்பதனடிப் படையில் பகுப்பது ஆகும் என்றே கூறுகிறார். மேலும் அதனால் பொருள்களை வகைப் படுத்தித் தொகுக்கவும் இயலும். நூல் கட்டமைப்போடு இயைந்த அறிவு பகுப்பு முறையே நூல் பகுப்பு முறை (Classification of book) ஆகும்.

எடுத்துக்காட்டு (Example)



எடுத்துக் காட்டில் பால் அறிவின்படி நிலை, வயது ஆகியவற்றால் வகைப்படுத்தப்பட்டுள்ளது.
இதன் அடிப்படையில் அமைந்த நூலகப் பகுப்பு முறை நூலின் உட்பொருள் துறையினை முன் மதிக்கப்பட்ட செயற்கை மொழியில் மொழி மாற்றம் செய்யப்படுகிறது.

சொல் பொருள் விளக்கம் (Definition)

பெர்விக் சேயர்ஸ் (Berwick Sayers) நூலகப் பகுப்பு முறை என்பது நூல் அடுக்கில் நூல்களை வரிசைப்படுத்தி அடுக்கி வைப்பது அல்லது படிப்பவர்களுக்கு உதவும் வகையில் நூல்களை உட் பொருள் விளக்கி வடிவமைப் பதே ஆகும் என்று பொருள் விளக்கம் தருகிறார்.

நூலகப் பகுப்பு முறை பற்றி டாக்டர் எஸ்.ஆர். அரங்க நாதன் (S.R. Ranganathan) நூலகப் பகுப்பு முறை என்பது நூலின் உட்பொருள் துறை யினை எண் வரிசையின் அடிப்படையிலான செயற்கை மொழியில் மொழி மாற்றம் செய்வது மற்றும் ஒத்த உட் பொருள் கருத்தையுடைய துறை நூல்களை நுண்ணிய எண் வரிசையிலான தனித்தொகுதி யாகப் பகுக்கச் செய்வது ஆகும் என்கிறார் இந்த எண்ணானது நூலின் கருத்தைவிட நூலின் சில எண்ணங்களைச் சுட்டிக் காட்டுகிறது.

நூலகப் பகுப்பியலின் குறிக்கோள் (Purpose of Library Classification)

ஒரு நூலகத்தில் நூல் தொகுப்பு (Document Collection) குறைவாக இருப்பின் நூல்களைத் தேர்ந்தெடுப்பதோ மறுபடியும் உபயோகிக்கத் தக்க வகையில் மீட்டுருவாக்கம் செய் வதோ மிக எளிது. ஒரு விளக்க மான வரிசை முறை தேவை யில்லை. மாறாக நூல் தொகுப்பு கள் அதிகமிருப்பின் ஒரு திட்டப் படியான முறை அவசியமாகும்.

வரிசைமுறை வழி வகைகள் (Ways of Arrangement)

நூல்களை நூல் அடுக்கு களில் வரிசைபடுத்த பலமுறை கள் கையாளப்படுகின்றன.

1. அளவு (Size)
2. வண்ணம் (Colour)
3. எடை (Weight)
4. கட்டமைப்பு (Binding)
5. நூல் அடங்கல் எண் (Accession Number)
6. ஆசிரியர் (Author)
7. தலைப்பு (Title)
8. கால வரையறை (Period)
9. நில இயல் சார்பு (Geography)
10. துறை (Subject)
11. மொழி (Language)
12. வடிவம் (form)
13. மதிப்பு (Value)
14. ஆர்வம் (Interest)
15. இயல்பு (fragilty)
16. விலை (Cost)
17. மரபு (Orthodoxey)
18. வாசகரின் வயது (Age of the reader)
19. அடுத்தடுத்து உப யோகித்தல் (Frequency of use)

நூலகங்களில் நூல்கள் குறைவாக இருந்தபோது அவை அளவின் அடிப்படை யில் அடுக்கி வைக்கப்பட்டன. அச்சுக்கலையின் கால மாறு பாட்டிற்கேற்ப நூல்களின் வரிசை முறையும் மாறுபடுகிறது. முதன் முதலில் அளவு, பிறகு நிறம், தொகுதி என விரிந் தாலும், அறிவுத்திறன் பிரி விற்கு இம்முறையால் ஈடு

கொடுக்க இயலவில்லை. அதனால் 'நூல் அடங்கல் எண்' முறை மேற்கொள்ளப்பட்டது. இதில் ஒவ்வொரு நூலுக்கும் தனித்தனி எண்கள் கொடுக்கப் பட்டன. இம்முறையில் நூலின் ஆசிரியர், தலைப்பு, துறை ஆகியவை எளிதில் கண்டு பிடிக்க முடியாததால் இதுவும் வழக்கிழந்தது.

பின்பு ஆசிரியர் பெயரில் வரிசைப்படுத்தும் முறை பின் பற்றப்பட்டது. இதிலுள்ள ஒரே பயன் என்னவெனில் ஒரு ஆசிரியரின் அனைத்து நூல் களும் ஒரே இடத்தில் கிடைக்க வாய்ப்புள்ளது. ஆனால் பல ஆசிரியர்களுக்கு ஒரே பெயர் இருப்பின் வரிசைப்படுத்துவதில் பல பிரச்சினைகள் ஏற்பட்டது. தலைப்பின் வழி வரிசைப் படுத்துவதிலும் பொருள் அடிப் படையில் அகரவரிசை முறை யிலும் இதே பிரச்சினை ஏற் பட்டது. அதனால் நூல்களை வரிசைப்படுத்த ஒரு புதிய முறை தேவையாயிற்று அதுதான் ;

நூலடுக்கில் நூல்களை வரிசைப்படுத்துதல் (Arrangement of Books on the shelf)

நோக்கம் (Purpose)

நூலகத்தின் ஐந்து கட்டளைகளை மேற்கொண்டு நிறைவுறச் செய்யும்படி அமை வதே நூல் அடுக்கு முறை யாகும்.

குறிப்பாக அது கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றை மேற்கொண்டு வாசகர்களுக்கு உதவவேண்டும்.

1. நூல்களைப் பயன்படுத்து வோருக்கு உடனடியாகக் கிடைக்கச் செய்தல்.
2. நூலடுக்கில் வரிசைப் படுத்தும் முறையினை நுண் ணாழுக் கம் (mechanising) செய்வது.
3. ஒருங்கிணை துறைகளை வருமுறையான மற்றும் உதவியான முறையில் ஒன்று சேர்ப்பதன் மூலம் வாசகர்களுக்கு உதவுவது.
4. நூல் அடுக்குகளிலிருந்து வாசகர்களால் எடுக்கப்பட் நூல்களைத் திரும்பவும் நூல் அடுக்குகளில் வரி சைப்படுத்துவது.
5. புதிதாகச் சேர்க்கப்பட்ட நூல்களை, நூல் அடுக்கு களில் சரியான இடத்தில் அமைப்பது.
6. குறிப்பிட்ட நூல் தொகு திகளின் சிறப்புத் தன்மை யையும் பொருட் செறி வற்ற தன்மையையும் அவ்வப்போது மதிப்பீடு செய்தல்.
7. நூல் சேர்க்கையினை வாசகர்கள் மூலம் அடிக்கடி மதிப்பீடு செய்து அதன் சிறப்பினை உயர்த்துதல்.

மேற் கூறியவற் றைக் கடைப்பிடிப்பதன் மூலம் ஒரு நூலகம் வாசகர்களுக்குச் சரி யான நூல்களைச் சரியான நேரத்தில் பயன்படுத்திக் கொள்ள வழங்க முடியும். மேலும் இத்தகைய பணிக்கு உதவுவது நூல் அடுக்குகளில் துறையின் அடிப்படையில் அமைந்த வரிசை முறையே ஆகும்.

துறை வரிசை முறை (Subject arrangement)

நூலகத்தில் நூல்களைப் பாகுபடுத்த, செயற்கை மொழிக்

குத் துறைகளை மொழி மாற்றம் செய்யும் பகுப்புமுறை பின்பற்றப்படுமானால் நூல்களை வரிசைப்படுத்தவும் ஒரே துறையைச் சார்ந்த இணை பிணை நூல்களை ஒருங்கிணைக்கும் துறையைச் சார்ந்த அடுக்கு வரிசை முறையே (Subject arrangement) மிகவும் சிறந்ததாகும்.

நன்மைகள்

1. ஒரு வாசகர் தனக்குத் தேவையான நூல்களை நூல் அடுக்குகளில் தேடும் போது கிடைக்கவில்லை எனில், துறை நூல்கள் இணைந்தே இருப்பதால் அதே துறையைச் சார்ந்த வேறு நூலைத் தனது தேவைக்காகத் தேர்ந்து எடுத்துப் பயன்படுத்திக் கொள்ளலாம்.
2. ஒரே துறையைச் சார்ந்த அனைத்து நூல்களும் ஒரே இடத்தில் இணைந்து இருப்பதால் வாசகர்கள் தனக்குத் தேவையான நூல்களை மிக எளிதில் தேர்ந்தெடுக்கலாம்.
3. இதன் மூலம் ஒரு துறைக்கு இணை அல்லது சார்புடைய துறை நூல்களும் நூலடுக்குகளில் அதற்கு இணையான இடத்தில் அடுக்கப்பட்டிருக்கும்.
4. குறிப்புதவி நூலகருக்கு இம்முறை, ஒரே துறை சார்ந்த குறிப்புதவிப் பணி செய்யும்போது மிகவும் பயன்படும்.

மேலும் துறை வரிசை முறை

1. ஒரு குறிப்பிட்ட துறையில் நூலகத்தில் என்னென்ன நூல்கள் இருக்கின்றன ?
2. தேவைக்கேற்ப ஒரு துறையின் இணை துறை நூல்கள் நூலகத்தில் என்னென்ன இருக்கின்றது என்பது போன்ற விவரங்களைச் சேகரித்துக் கொடுக்கின்றது.

தற்போது வாசகர்கள் குறிப்பிட்ட துறைபற்றிய நூல்களை அதிகமாகக் கேட்கின்றனர். எனவே துறை அடிப்படையில் நூலடுக்கில் அடுக்கி வைத்தால் அவை அதிக பயனை அளிக்கும்.

இம்முறையின் குறிப்பிடத்தக்க பயன்கள்

1. நூல்கள் பெரிய அளவில் (maximum) உபயோகப் படுத்தப்படுகின்றன.
2. துறையைச் சார்ந்த கேள்விகளுக்கு மிகவும் விளக்க முறையில் பதில் அளிக்கப் படுகிறது.
3. ஒரே துறையைச் சார்ந்த இணை பிணை நூல்கள் ஒரே இடத்தில் அடுக்கி வைக்கப்படுகின்றன. ஒரே துறையைச் சார்ந்த எல்லா நூல்களும் ஒரே இடத்தில் சேர்க்கப்படுகின்றன.

நூலகப் பகுப்பியலின் தேவை (Need for Library Classification)

நூலகப்பகுப்புமுறையின் அடிப்படையிலான துறை பகுப்பு வரிசை முறையே நூல் அடுக்குகளில் நூல்களை வரிசைப்படுத்த மிகச் சிறந்த

தாகும். இதற்கென நூலகங் கள் டூயி தசாம்ச பகுப்பு முறை (Dewey Decimal Classification) கோலன் பகுப்பு முறை (Colon Classification) போன்ற நூல் பகுப்பு முறைகள் Scheme of Classification கையாளப் படுகின்றன. பகுப்பு முறை துறைகளைப் பகுப்பு எண்கள் (Class Number) குறிக் கின்றன. நூல் அடுக்குகளில் நூல்களை வரிசைப்படுத்த இப்பகுப்பு எண்களே பயன் படுத்தப்படுகின்றன. நூலகத் தின் குறிக்கோள்களை இந்த எண்கள் நிறைவு செய்கின்றன.

நூலகப் பகுப்பியல் கீழ்க் காணும் செய்திகளால் நிறை வேற்றப்படுகின்றன.

பயனுடைய வரிசைமுறை (Helpful Sequence)

நூலகப் பகுப்பு முறை யினடிப்படையிலான நூல் அடுக்கு முறையே வாசகர் களுக்கும் நூலகப் பணியாளர் களுக்கும் மிகவும் உதவக் கூடியது. பகுப்பு எண்களாலான நூல் அடுக்கு முறையே நூல் களை ஒருங்கிணைத்தும் துறை யின் இணை, பிணை நூல்க ளோடு இயைந்தும் வரிசைப் படுத்த உதவும்.

இது வாசகர் குறிப்பிட்ட பகுதியில் நூல்களை மேலெழுந் தவாரியாகப் படிப்பதற்கு முடி கிறது. வாசகர்களுக்குத் தேவை யான நூல்களைக் கண்டுபிடிக்க உதவுகிறது. குறிப்பிட்ட ஒரு நூல் கிடைக்கவில்லையெனில் பகுப்பின் அடிப்படையில் அடுக் கப்பட்டிருக்கும் நூல்களிலி ருந்து அதே துறையில் வேறு நூல்களைப் பெற முடிகிறது.

நூலடுக்கில் சரியான இடம் (Shelf Location)

ஒரு துறையைச் சார்ந்த அனைத்து நூல்களும் நூல் அடுக்கில் ஒரே இடத்தில் அடுத்தடுத்து வரிசைப்படுத்தப் படுவதால், வாசகர்கள் ஒரு துறையின் அனைத்து நூல் களையும், இணைப்பிணை நூல்களையும் ஒரே இடத்தில் நுணுக்கி இடங்குறிக்க முடிகிறது.

சரியான பதிலமர்த்தீடு! (Correct Replacement)

உபயோகிக்கப்பட்ட நூல் களை மீண்டும் நூல் அடுக்கு களில் மிக விரைவாக வரிசைப் படுத்த உதவுகிறது.

இயந்திர இயக்க வரிசை முறை (Mechanical Arrangement)

ஒரு குறிப்பிட்ட வரிசை முறையில் நூல்களை அடுக்க முடிவு செய்தபின் அதை அடிக் கடி மாற்றக்கூடாது. இது நூல் களை உபயோகித்த பின்பு திரும் பவும் நூலடுக்கில் வரிசைப் படுத்தவும், ஒரு எளிமையான, நிலையான வரிசை முறை யினைப் பின்பற்றவும் பயன் படும்.

புதிய நூல்களைச் சேர்த்தல் (Additioin of New Documents)

அறிவு விரிவிற்கேற்பப் புதிய நூல்கள் நூலகத்தில் சேர்க்கப்படுகின்றன. இப்புதிய நூல்களை நூலடுக்குகளில்

தொடர்ந்து சரியான இடத்தில் வரிசைப்படுத்த நூலகப் பகுப்பு உதவியாக இருக்கிறது. இப்பணி தொடர்ந்து நடைபெற நூலகப் பகுப்பு மூலம் இயந்திர இயக்க வரிசை முறையால் செய்து முடிக்கப்படுகிறது.

நூல் இருப்பிலிருந்து நூல்களைத் திரும்பப் பெறுதல் (Withdrawal documents from stock)

நூலகப் பகுப்பு முறை நூல் இருப்பிலிருந்து நூல்களைத் திரும்பப் பெறுவதற்கு உதவுகிறது.

துறை சுட்டிக் காட்டுதல் (Subject Indication)

ஒவ்வொரு நூலும் பகுப்பு எண் அல்லது குறி எண்ணைத் தன்னகத்தே கொண்டுள்ளது. நூலகப் பணியாளர்கள் இதன் உதவி கொண்டு பார்த்த மாத்திரத்திலேயே நூலின் துறையை அறியலாம். இதே போல் வாசகரும் நூலகப் பகுப்பை அறிந்திருந்தால் தேவையான நூலை அறியலாம்.

நூல் காட்சி (Books Display)

ஒரு குறிப்பிட்ட தலைப்பில் நூல் கண்காட்சி நடத்தவும், திறந்த அமைப்பு முறையில் நூல்களைச் சிறப்பாக நூல் காட்சி மூலம் காட்ட நூலகப் பகுப்பு உதவுகிறது.

நூலகப் பகுப்பு முறையின் பயன்கள்

1. நூற்றொகைகள் 'நூற்பட்டி' இணைப்பு நூற்பட்டி தயாரிக்கவும்.
2. தகவல்களைப் பாகுபடுத்தி அறியவும்.
3. குறிப்புதவிக் கேள்விகளை வகைப்படுத்தவும்.
4. வாசகர்களிடமிருந்து பெறும் யோசனைகளை வகைப்படுத்தவும்.
5. நூல் வடிவில் இல்லாத (Non-book materials) கடிதப் போக்குவரத்துகள், புகைப்படங்கள், படச்சுருள் போன்றவற்றை அடுக்கி வைக்கவும்.
6. பல்வேறு வகையான புள்ளி விவரங்களைப் பகுக்கவும்.
7. நூற்பட்டியில் பகுப்புப் பகுதி பதிவுகளை வரிசைப் படுத்தவும்.
8. துறை தலைப்புகளை உருவாக்கவும் நூலகப் பகுப்பு முறை பயன்படுகிறது.

இக்கட்டுரையில் நூலகப் பகுப்பு முறையின் நோக்கம், தேவை ஆகியவை பற்றி விளக்கப்பட்டுள்ளது. இனி அடுத்துவரும் கட்டுரைகளில் நூலகப்பகுப்பு முறையின் பல்வேறு நுட்பங்களையும், விதிகளையும் விளக்கமாகக் காணலாம்.

பயிற்சியால் நூலகத்தில் துறை வழிமுறையில் நூல் அடுக்கும் முறையினை விரிவாக அறியலாம்.

நன்றி : சென்னைப் பல்கலைக் கழகம், I.C.E.
சென்னை - 5.

நூலகத் தந்தை அரங்கநாதன் வாழ்க்கைக் காவியம்

முத்தமிழ்க் கவிஞர்
டாக்டர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன்

2. இளமைப் பருவம்

நாள்வளர நாள்வளர முகத்தில் மீசை
நான்வரவா எனக்கேட்க அடியெடுக்கும்!
ஆள்வளர ஆள்வளர ஆண்மை மெல்ல
அண்டிவரத் தலைநீட்டும்! உறுதி கொண்ட
தோள்வளரத் தோள்வளரத் தோளுக் கேற்ற
துணைதேடச் சிந்திப்பார் பெரியோர்! செந்நெல்
தாள்வளரத் தாள்வளர உழவ னுக்குத்
தாங்காத மகிழ்ச்சியைப் போல் மகிழ்ந்தார் தாயார்!

உருக்குமணி - அரங்கநாதன் திருமணம்

பதினைந்து வயதுள்ள அரங்க நாதன்
படிக்கின்ற காலத்தில் மணந்து கொண்டான்!
முதியவர்கள் தேர்ந்தெடுத்த பெண்ணை மூன்று
முடிபோட்டுக் கணவனென்று காட்டிக் கொண்டான்!

இளநங்கை உருக்குமணி ஆடை கட்ட
இன்னொருவர் கைபார்க்கும் சிறுமி! ஆனால்
மலர்தங்கை தன்கழுத்தில் தாலி கட்ட
மட்டுமவள் எப்படியோ தலைய சைத்தாள்!

ஆடை கட்டத் தெரியாத சிறுமி தாலி கட்டிக் கொள்ளும் அன்றைய அவலநிலை!

சரியாக முளைக்காத சிறகு! கண்கள்
தரைபார்க்க முடியாத கனவு! வாழ்க்கை
தெரியாத நிலத்தினிலே நடவு! நெஞ்சைத்
திறக்காமல் விழிக்கின்ற கதவு! கண்டார்!

அந்தக் காலத்துத் தம்பதிகள் நிலை!

ஆசையுடன் மனைவிமுகம் பார்க்கவந்தால்
அடுப்பங்கரை யில்இருப்பாள்! - அவளைத்
தொடுவதற்குள் தாய்வருவாள்!

தோசைசுட்டு வைத்திருந்தால் எடுப்பதுபோல்
தொடும்போது விலகிடுவாள்! - பாட்டி
நடந்துவந்து குரல்கொடுப்பாள்!

கதவுக்குப் பின்நின்று பார்த்துவிட்டால்
கள்ளியிவள் என்றிடுவார்! - தினமும்
சொல்லெடுத்துக் கொன்றிடுவார்!
கதவுக்கு முன்நின்று பார்த்துவிட்டால்
கைவேலை நடக்கவில்லை! - வீட்டில்
மைவேலை நடக்குதென்பார்!

முகம்கழுவ நீர்கொடுத்தால் தாய்கேட்பாள்:
''முன்இருக்கும் நான்முடமா?
என்நினைத்தாய்? நான் ஜடமா?''
புகுந்தகத்தில் பெரியவர்கள் முறுக்குவார்:
''பொம்மனாட்டி கம்மலுக்கா
ஆம்படையான் திருகாணி?''

''சிறுவயது பருவமென்று வந்துவிட்டால்
தென்னைமரம் எனநினைப்போ? - உன்
கண்ணிரண்டும் கதவடைப்போ?''
பொறுமையுடன் தம்பதிகள் கேட்டிருக்கப்
புரிந்துகொண்ட காலமது! - காதல்
மறைந்திருக்கும் கோலமிது!

நங்கையும் நம்பியும் நடத்திய குடும்பம்

பேசத் தெரியா வீணை!
பிரிந்து கிடக்கும் விரல்கள்!
ஆசைக் கதையின் தொடக்கம்
அச்சத் தாலே முடக்கம்!

தென்றல் வந்து போகும்!
சிரிக்கும் மலரும் காணும்!
நின்று பார்க்கும் நிலவும்!
நெஞ்சில் ஏக்கம் குலவும்!

அணில்கள் ஆடும் தோட்டம்
அவைபோல் ஆட நினைப்பார்!
இனிக்கப் பாடும் குயில்கள்
இவைபோல் இருக்க விழைவார்!

நெஞ்சில் பிடித்த நிழலை
நினைவில் விளைந்த கனியை
கொஞ்சம் பறித்து மகிழ்ந்தார்!
குடும்பம் நடத்த முயன்றார்!

இல்லறமும் நல்லறமும்

இல்லறம் நடத்திடும் போதும் கல்வியாம்
நல்லறம் மறந்திட நம்பி விரும்பிலன்!
எல்லையில் கல்வியின் எல்லை அறிந்திடச்
செல்லுதல் குறியெனத் தேர்ந்து நடந்தனன்!

நெல்லினை விதைத்தவன் நெடுநாள் பொறுப்பதும்
முல்லையைப் பறித்திட முனைவோன் உழைப்பதும்
வில்லினைப் பிடித்தவன் வெல்ல நினைப்பதும்
கல்வியைத் தொடர்வதும் கடமை ஆகுமே!

மெட்ரிகுலேசன் தேர்வில் முதல் வகுப்பில் வெற்றி

ஏட்டினில் பதித்தவன் எண்ணம் உயர்ந்தது
தீட்டிய கருத்தெலாம் சிந்தை புகுந்தது
நீட்டிய தேர்வினில் நிமிர்ந்தான் முதல்வனாய்
ஊட்டிய சான்றோர் உள்ளம் குளிர்ந்தது!

கல்லூரியில் கல்விபெறச் சென்னைக்கு வருதல்!

சீர்காழித் திருத்தலத்தில் திகழ்ந்திருந்த பள்ளியிலே
சீர்பாடும் கல்வியினைச் சிறப்பாக முடித்துநின்றான்!
பேர்வாழ மென்மேலும் பெரியகல்வி தேடுகின்றான்!
வேர்போலும் குறிக்கோளால் விண்தொடவே முயல்கின்றான்!

கண்ணைஇமை காப்பதுபோல் காலமெலாம் காத்துவந்த
அன்னையினைப் பாட்டியினை அன்பான மனைவியினைச்
சென்னைசென்று கல்லூரி சேர்ந்திடவே பிரிந்துவந்தான்!
குன்றெடுக்கும் கொள்கையினால் குடும்பத்தை மறந்திருந்தான்!

தாம்பரத்தில் அமைந்துள்ள தனிச்சிறப்புக் கல்லூரி
நாம்மதிக்கும் கிறித்தவர்கள் நடத்துகின்ற கல்லூரி
மாம்பழம்போல் புகழுடனே மணப்பதனால் சேர்ந்து
கொண்டான்!
தாம்பெற்ற முதல்மதிப்பெண் தகுதியினைத் தரக்கண்டான்!

முதல்வகுப்பில் இன்டர்மீடியட் தேர்ச்சி

கல்லூரி வாசலிலே கூட்டம் - அது
கன்னியரைக் கேலிசெய்யும் மானவர்கள் கூட்டம்!
இல்லாத வம்புகளைக் கூட்டும் - கல்வி
இன்றுள்ள நிலைமையினைப் படம்பிடித்துக் காட்டும்!

பெற்றோர்கள் நிலைமறந்து கிடப்பார் - ஆசிரியப்
பெரியோரை மதிக்காமல் மனம்போல நடப்பார்!
கற்றோர்கள் என்றாலே சிரிப்பார் - கல்விக்
கடைபோட்டு விற்கின்ற காட்சிகளை இரசிப்பார்!

இன்றுள்ள நிலைமையில்லை அன்று - கல்வி
ஏற்றமுடன் நிமிர்ந்துநின்று பெருமைபெற்ற துண்டு!
அன்றுகற்றுப் புலமைபெற்றோர் பலராம் - அவருள்
அகிலத்தை வியக்கவைத்து வாழ்ந்தவர்கள் சிலராம்!

நெஞ்சார நேசித்தான் அரங்கன் - கல்வி
நிழலினிலே தொடர்ந்துகண்டான் வெற்றியெனும் வரங்கள்!
துஞ்சாமல் படித்ததனால் ஏற்றம் - என்றும்
துவளாமல் சுறுசுறுப்புக் குறையாத தோற்றம்!

முதல் வகுப்பில் பி.ஏ. தேர்ச்சி

ஆற்றல் இருந்தும் அகந்தை இல்லை!
அறிவு நிறைந்தும் அழுக்கா றில்லை!
போற்றக் கண்டும் பொய்மை இல்லை!
பூக்கள் குவிந்தும் புழுதி இல்லை!
சீற்றம் கொள்ளும் செயலே இல்லை!
சிறுமை காட்டும் மொழியும் இல்லை!
ஏற்றம் நாளும் வளர்ந்து வளர்ந்து
எல்லாத் தேர்வும் முதல்வன் ஆனான்!

குடும்பத்தைக் கவனிக்க வேலையில் சேர நினைத்தல்

ஏழைக் குடும்பம் இனிமேல் உயர்ந்திட
எண்ணியே வாடுகிறான்! - நாளை
வாழும் வழியினை எட்டிப் பிடித்திடும்
வாய்ப்பையே தேடுகிறான்!

வேலை கிடைத்தால் விரைவாய் வறுமை
விலக்கிட எண்ணுகிறான்! - வாழ்வு
பாலை நிலமாய்ப் படிந்து கிடப்பதைப்
பார்த்திட ஏங்குகிறான்!

மேலே படித்திட மேலும் பணத்தை
வழங்க எவருமில்லை! - அதனால்
பாலே நிகர்த்திடும் கல்வியைத் தள்ளிப்
பணிசெய்ய எண்ணுகிறான்!

அரங்கநாதன் முதுகலை வகுப்பில் சேரக் கல்லூரி முதல்வர் உதவுதல்

வெள்ளையர்கள் இந்நாட்டை ஆண்ட போது
விலைமதிக்க முடியாத செல்வம் எல்லாம்
கொள்ளையோ கொள்ளையென அடித்திருந்தார்!
கொடுமைகளை அவிழ்த்துவிட்ட வெறியர் ஆனார்!
எள்ளுக்கே இந்நாட்டு மக்கள் ஏங்கி
இரந்துண்டு வாழ்ந்திருந்தார்! அவர்கள் செய்த
கள்ளங்கள் பலகோடி! நினைத்தால் இன்றும்
கண்ணிரண்டில் குருதிவந்து கொட்டி டாதோ?

நன்றுசெய்தார் வெள்ளையர்கள் என்று சொன்னால்
நானூறு பழம்உண்டோர் ஒருப ழத்தை
இன்றெடுத்துப் போஎன்று சொன்னாற் போல
எச்சிலிலைப் பருக்கைகளைத் தந்தார் என்பேன்!
குன்றளவு தீமையினைச் செய்த போதும்
குண்டுமணி நன்மைசெய்த காரணத்தால்
இன்றவரைப் போற்றுவது. குறளார் தந்த
எண்ணத்தால் பண்பாட்டால் எழுந்த தென்பேன்!

வறுமையிலே வாழ்ந்திருந்த அரங்க நாதன்
மேற்கல்வி பெறுவதற்கு வசதி இல்லை!
திறமையிலே மிகுந்துள்ள ஏழைக் கல்விச்
செடியில்நீர் ஊற்றவழி இல்லை! துன்பம்
உறவுகொள்ளும் வேளையிலே 'இராசு' நல்லார்
உயர்ந்தமன வெள்ளையராய் விளங்கித் தக்க
சிறகளித்தார்! தம்பணத்தால் படிக்க வைத்தார்!
சிறப்பாகப் பறக்கவைத்தார் கல்வி வானில்!

(வளரும்)

"புஸ்தகத்தைப் படித்துப் பணக்காரர் ஆனவர், தம் ஆஸ்தியை லைப்ரரிக்கு எழுதி வைத்தார்."

நியூயார்க், மே, 14 ஜான் டிபாரி என்பவர் பொழுது போக்குவதற்காக பாஸ்டன் லைப்ரரியில் ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தாராம். அதில் பணம் சேர்க்கும் வழி பற்றிக் கூறப்பட்டிருந்ததாம். அதன்படி நடந்து அவர் ஏராளமான ஆஸ்தியைச் சேர்த்துவிட்டார். அவர் தம் 86 ஆம் வயதில் காலமாகிவிட்டார். தம் ஆஸ்தியான ரூ. 6,67,000 ஐயும் பாஸ்டன் லைப்ரரிக்கே எழுதி வைத்திருக்கிறார்.

இது பல அநுபவங்களில் ஒரே ஓர் உதாரணம். இது மாதிரி பல பேர் பல நூலகங்களினால் பயன்பட்டுத் தமது ஆஸ்தியை அவற்றிற்கு எழுதி வைத்ததுண்டு. அதனால்தான் மேலை நாட்டு நூலகங்கள் செல்வத் தட்டுப்பாடு இல்லாது சிறப்பாக வேலை செய்கின்றன. நூலகங்களின் சக்தியை முதலில் பூரணமாக அறிந்தவர் சீமான் ஆன்ட்ரூ கார்னீகி. அவர் மேலை நாடுகளில் புத்தகாலயங்கள் வளரச் செய்த வரலாறு பிரமாதமாகும்.

ஆண்ட்ரு கார்னீகியின் நூலகக்கொடை கட்டுரை வரவேற்கப்படுகிறது -(ஆர்)

பேசும் கம்ப்யூட்டர்

நீங்கள், உங்கள் உதவிக்காக பிரத்யேக கம்ப்யூட்டர் வைத்து இருக்கிறீர்களா? இனி அவை உங்களிடம் சகஜமாக பேசப் போகின்றன. அதற்கேற்ற நவீன கம்ப்யூட்டர் ஒன்றை இங்கிலாந்து நாட்டு விஞ்ஞானிகள் உருவாக்கி உள்ளனர்.

அந்த கம்ப்யூட்டரை இயக்கியதும் மனித முகம் உங்களிடம் பேசும். அதன் உதடு அசைவு மற்றும் குரல் எல்லாம் நம்மை போலவே இருக்கும். இது பல தகவல்களை கொடுக்கும் வகையில் இருக்கும். முக்கியமாக நமது வேலை பளுவையும் குறைக்கும்.

இந்த கம்ப்யூட்டருடன் டிஜிடல் காமிராவை இணைத்து விட்டால்..... நாம் பேசுவதை அந்த கம்ப்யூட்டர் புரிந்து கொண்டு, நமது வார்த்தைகளை அப்படியே டைப் செய்து கொடுத்து விடும்.

எனவே நீங்கள் யாருக்கும் தெரியாமல் ஏதாவது சில தகவல்களை டைப் செய்ய வேண்டுமானால், அந்த கம்ப்யூட்டர் முன் நின்று பேசினாலே போதும்..... அதுவே 'டைப்' செய்து தந்து விடும்.

தகவல் : மாலை மலர். சென்னை, 24.2.96 பக்கம் 8.

தகவல் பணி

தமிழக தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்
டாக்டர் மு. தமிழ்க்குடிமகன், எம்.ஏ., பி. எச்.டி அவர்களின்
மேலான கவனத்திற்கு...

சட்டத்துறையில் இந்திய மொழிகளைப் பயன்படுத்துவதில் ஈடுபட்டிருக்கும்

தன்னார்வமுனைப்புடைய அமைப்பு களுக்கான நிதியுதவி

சட்டத்துறையில் இந்திய மொழிகளைப் பரப்புவதிலும் பயன்படுத்துவதிலும் ஈடுபட்டுள்ள தன்னார்வமுனைப்புடைய அமைப்புகளுக்கு நிதியுதவி அளிப்பதற்கான ஒரு திட்டத்தை இந்திய அரசின் சட்டம் மற்றும் நீதி அமைச்சகம் தயாரித்துள்ளது. இந்திய மொழிகளில் கீழ்க்கண்ட ஏதேனும் ஒரு படைப்பாக்கத்தில் ஈடுபட்டுள்ள அமைப்புகளுக்கு இந்த நிதியுதவி மானியம் கிடைக்கத்தக்கதாகும். அதாவது

1. மூல படைப்பான சட்ட நூல்களின் தயாரிப்பு மற்றும் வெளியீடு.

2. தரமான சட்ட நூல்களின் அல்லது புகழ்ச் சான்ற சட்ட ஏடுகளின் மொழிபெயர்ப்பு மற்றும் வெளியீடு.

3. சட்டச்சொல் அகராதியின் தயாரிப்பு மற்றும் வெளீயீடு, மேலும்

4. சட்ட பத்திரிக்கைகளின் வெளியீடு.

விரிவான விவரங்களுக்கும் விண்ணப்பப் படிவத்திற்கும் அணுகவேண்டிய

முகவரி	: Last date of receipt cf application is 30th June 1996.
கூடுதல் செயலர்	: Joint Secretary/Legislature
ஆட்சி மொழிகள் சிறகம்	Counsel Ministry of Law, Justice & Company affairs.
இந்தியன் லா	: Official Languages Wing.
இன்ஸ்டிடியூட் பில்டிங்	: Indian Law Institute Building,.
பகவான் தாஸ் சாலை	: Bhagawan Dass Road
புது தில்லி 110 001.	: NEW DELHI - 110 001.

DA 3478/2/96

தகவல்: விளம்பரம். தினமணி. சென்னை 14.5.1996.
பக்கம்.3 காண்க



குறளதிகாரம்

பாவலர் தமிழப்பன்

திருமன்ற வெளியீடு

பாவலர் தமிழப்பனை அறியாதார் தமிழையும் தமிழ் வகையும் நன்கு அறியாதார் எனில் மிகையாகாது.

இவர் தமிழ் மரபு வழுவாத பாக்களை இயற்றுவதில் வல்லவர்; பகுத்தறிவுச் செல்வர்;

தமிழாலும் திருக்குறளாலும் பலர் இத்தமிழகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இவரோ தமிழுக்காகவும் திருக்குறளுக்காகவும் வாழ்பவர்.

எளிய தோற்றமும் வலிய உள்ளமும் உடையவர். எதற்கும் அஞ்சாமல் தம் கருத்தை எடுத்துக்கூறும் நெஞ்சுரம் மிக்கவர். திருக்குறள் நெறி வளர அயராது உழைக்கும் 61 அகவை இளைஞர்.

'குறளதிகாரம்' என்னும் இப் பாநூல் இவரின் திருக்குறள் அறிவையும், ஆர்வத்தையும் தெரிவிக்கும். திருக்குறள் நெறிபரவ நாம் செய்ய வேண்டுவனவற்றையும், திருக்குறள் அதிகாரங்களின் சாரத்தையும் தெள்ளு தமிழில் எல்லோருக்கும் எளிதில் புரியும் வண்ணம் இனிய பாக்களாக இந்நூலில் வழங்கியுள்ளார். பெயருக்கேற்ப தமிழுக்கே தந்தையாக விளங்கும் தமிழப்பன் அவர்களைப் பெரிதும் பாராட்டுகிறேன். அவர் பணி சிறக்க அவர் நீடுவாழ வாழ்த்துகிறேன்.

இந்நூல் போன்று இன்னும் பல நூல்களைப் படைத்து, தமிழுலகுக்கு இவர் வழங்க வேண்டும் என்பது எமது பேரவா.

– திருவள்ளுவரடிமை முருகு.

GOVERNMENT OF TAMIL NADU

Public Libraries - Connemara Public Library, Madras Constitution of Advisory Committee - orders - Issued.

EDUCATION, SCIENCE AND TECHNOLOGY (K2) DEPARTMENT

G.O.Ms.No.951

Dated : 14-12-95
Read :

From the Director of Public Libraries letter Rc.No. 22460/K1/82 dated 21.12.93, 21.7.94, 18.4.95 and 16.11.95

ORDER:

The Government accept the recommendations of the Director of Public Libraries and constitute an Advisory Committee, for Connemara Public Library, Madras with the following members :-

1. Dr. Perumal, M.A., M.L.I.S., Ph.D.,
   Retd.Librarian, Pachaiyappa's College, Madras.
2. Dr. P.Arumugam, Retd. Deputy Director of Public Libraries.
3. Thiru. A.M.Paramasivanandan, Retired Prof. of Tamil. Pachaiyappa's College, Madras.
4. Thiru. R.Muthukumarasamy, Managing Director, Saiva Siddhantha Book Publishing Society.

2. The Advisory Committee would function as an Adhoc Committee for a period of 2 years from the date of this order.

3. The objects of the above committee shall be as follows:-

   i. To formulate schemes for involving the Public in Library activities so as to enhance the reading habits among them and also to render necessary advice therefore.

   ii. To improve the youth in all ways of life (i.e. Arts, Education, Economic and Social status) by utilising the services of Library.

   iii. To improve financial resources and enroll all members of public in Library.

iv. To raise donations by way of equipments etc. for development of Library services and to render assistance for conducting Library Development conferences.

v. Also to extend all necessary technical guidance for the development of Public Library Service.

3. The expenditure for the said committee's meetings would be met from the contingent Fund of the Connemara Public Library.

4. This order issues with the concurrence of Finance Department Vide its U.C.No. 4794/Ps/P/95 dated 11.10.95

(BY ORDER OF THE GOVERNOR)

L.N.VIJAYARAGHAVAN,
SECRETARY TO GOVERNMENT.

To,

The Director of Public Libraries, Madras-2.
The members concerned and the Director of Public Libraries.
The Accountant General, Madras-18.
Copy to : Finance, Madras-9.
Copy to : SCS.

forwarded by order

sd/x xxxx
Section Officer.

Proceeding of Director of Public Libraries : Madras-600 002.
Endt. No.22460/A1/82
Dated: 23-1-96

Copy communicated for information and necessary action.

R. Kannan,
Director of Public Libraries.

true copy/forwarded/

Superintendent.

To · All Advisor Committee members, Madras

Copy to Librarian, Connemara Public Library,
Madras-8.

Copy to : Stock file

km/29.1

பொது நூலக இயக்குநரின் செயல்முறைகள், சென்னை - 600 002.
ந.க.எண் : 6193/எ2/96 நாள் : 11.4.'96

பொருள் : பொது நூலகத் துறை, சென்னை -2, நூலக இலக்கியம், என்னும் தமிழ் மாத இதழினை நூலகங்களில் வாங்குவது தொடர்பாக.

பார்வை : இவ்வலுவலகச் செயல்முறைகள், மு.மு. 16533/எ2/96, நாள் : 12.2.96

❖ ❖ ❖ ❖ ❖

பார்வையில் காணும் இவ்வலவலகச் செயல்முறைகளில், **'நூலக இலக்கியம்'** என்னும் தமிழ் மாத இதழினை, சந்தாமுறையில், வாங்க அனைத்து மாவட்ட நூலக அலுவலர்களுக்கும் அறிவிக்கப்பட்டிருந்தது.

'நூலக இலக்கியம்' என்னும் மாத இதழில் நூலக வளர்ச்சி மற்றும் நூல்கள் பற்றி செய்திகள் சிறப்பாக வெளியிடப்படுவதால், இம்மாத இதழினை, நடப்பு நிதியாண்டில் (1996-97ல்) அதிக அளவில் வாங்கி அனைத்து மாவட்ட நூலக ஆணைக் குழுக்களின் கீழ் செயல்படும் நூலகங்களுக்கு வழங்குமாறு எல்லா மாவட்ட நூலக அலுவலர்களுக்கும்தெரிவிக்கப்படுகிறது.

பொது நூலக இயக்குநர்

பெறுநர் :
அனைத்து மாவட்ட நூலக அலுவலர்கள்,

நகல் :
டாக்டர் பா. பெருமாள்
6, மு.வ. தெரு,
அரும்பாக்கம், சென்னை - 106

2. தொ.கோ. (2)

க.ஆ.17.4

வேண்டுகோள்

நூலகம் இலக்கியம்

மக்களின் பொது அறிவை வளர்ப்பதற்காக நம் அரசாங்கம் ஏராளமான பொருட் செலவில் நூலக இயக்கத்தைத் 1948 முதல் சட்டமாக்கி தொடங்கி நடத்தி வருகிறது. ஆண்டுதோறும் நூலகங்களின் எண்ணிக்கையும் அவற்றுக்குச் செலவிடும் தொகையும் படிப்போரின் அளவும் பெருகி வருகின்றன. அதுபோலவே புத்தக வெளியீட்டுப் பதிப்பகங்களும் அவற்றிலிருந்து வெளிவரும் புத்தகங்களின் எண்ணிக்கையும் வெள்ளம் போல் பெருகி வருகின்றன. அளவு பெருகினால் மட்டும் போதாது: தரமும் உயர வேண்டும். அப்படியானால் தான் நூலக இயக்கம் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம் வெற்றியுடன் நிறைவேற முடியும்.

பொது அறிவு வளர்ச்சிக்குக் கருவியாகிய நூலக இயக்கம் வெற்றிபெற மூன்று பகுதியினரின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம். நூலகங்களை நிருவகிப்பவர்கள், நூலகங்களுக்குத் தேவையான நூல்களை வெளியிடும் பதிப்பங்கள், சிறந்த நூல்களைப் படைத்துத் தரும் எழுத்தாளர்கள் ஆகிய முப்பிரிவினரும், தங்களின் மகத்தான பொறுப்பின் தன்மையை உணர்ந்து செயல் படவேண்டும். அப்படிச் செயல் பட்டால்தான் நம் நாட்டின் எதிர் காலத்திற்குத் தூண்களாகிய சிறந்த பண்புள்ள பிரஜைகளை உருவாக்க முடியும்.

மேற்கூறிய முப்பிரிவினருக்குமிடையே, கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ள உதவும் கருவியாக நூலகம் இலக்கியம் என்னும் இம்மாத இதழ் செப்டம்பர் 1995 முதல் ஒவ்வொரு இதழிலும் மேற்கூறிய பிரிவினரிடமிருந்து சிறந்த கட்டுரைகள் நூலகம் இலக்கியம் இதழில் இடம் பெறும். வளமான நூல்களை இலக்கிய வளர்ச்சிக்குப் பயன்படும் வகையில், பல அறிஞர்களும் தங்கள் ஆலோசனைகளை நூலகம் இலக்கியம் வாயிலாக வெளியிடச் செய்யவேண்டுமென்பது எங்கள் ஆவல்.

ஒவ்வொரு மாதமும் தமிழில், வெளிவரும், நூல்களைப் பற்றி சுருக்கமான குறிப்புகளுடன் நூலகம் இலக்கியம் வெளி

யிடும் சிறந்த நூல்களைப் பற்றி விரிவாக விமரிசனம் செய்யவும், மட்டமான புத்தகங்களைப் பற்றி பாரபட்சமின்றி, விவாதித்துக் கண்டனம் செய்யவும் நூலகம் இலக்கியம் தயங்காது.

உண்மையிலேயே பயனுள்ள சிறந்த நூலக இலக்கியங்கள் வளர்ந்து, நாட்டு மக்களுக்குப் பயன்படவேண்டும் என்ற கருத்துடைய அனைவரும் எங்களுடன் ஒத்துழைக்க வேண்டுமென்றும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

இன்றும் தமிழ்; என்றும் தமிழ்
எங்கும் தமிழ்; எதிலும் தமிழ்
நூலகச் செய்தி தகவல் அறிவியல்
தமிழ் வளர்ப்போம்; புத்தகச்
செய்திகளை அறிந்து பயன்பெறுவோம்!
நூலக விஞ்ஞானத் தமிழ் வளர்ப்போம்!
நூலகத் தமிழ்மொழி வளர்ப்போம்!

தங்களால் முடியும்,
உடன்பிறப்புகளே
நம்புங்கள்!

ஊர் கூடித் தேர் இழுப்போம்.

நூலகம் இலக்கியம்
(மாத இதழ்)
6, மு.வ. தெரு,
அரும்பாக்கம்,
சென்னை - 106
போன் : 484 5034

அன்பும், நன்றியுமிக்க

நூலக ஞானி

Dr. பா. பெருமாள்
M.A., M.Lib.Sc., Ph.D.,

ஆசிரியர்
நூலகம் இலக்கியம்

ஆண்டுச் சந்தா ரூ. 120
ஆயுள் சந்தா ரூ. 500
புரவலர் ரூ. 1000

பதிப்பாளர்களுக்கு
நூலகம் இலக்கியம்

விடுக்கும் வேண்டுகோள்

- பதிப்பகங்களின் பிரதிநிதியாக ''நூலகம் இலக்கியம்'' ''புத்தகச் செய்தி''களை தாங்கி 1995 செப்டம்பர் முதல் மாதந்தோறும் மூன்றாவது வாரத்தில் வெளிவரும். எல்லா பொது, பள்ளி, கல்லூரி நூலகங்களுக்கும் சென்று உங்களுடைய வெளியீடுகளைப் பற்றி 'நூலகம் இலக்கயம்' எடுத்துச் சொல்லும்.

- உங்கள் பதிப்பகத்திலிருந்து வெளிவரும் நூல்கள் ஒவ்வொன்றிலும் ஒரு பிரதி மட்டும் 'நூலகம் இலக்கியம்' அலுவலகத்திற்கு அனுப்பித் தந்தால் போதும். அந்தந்த மாதமும் எந்தெந்தப் பதிப்பகத்திலிருந்து என்னென்ன புத்தகங்கள் வெளிவந்துள்ளன என்ற விபரங்களை விளக்கக் குறிப்புகளுடன் வெளியிடுவோம். பயனுள்ள, நல்ல சிறந்த புத்தகங்களைப் பற்றி விரிவான விமரிசனமும் வெளியிடுவோம்.

- வெளிவர இருக்கும் புத்தகங்களைப் பற்றிய குறிப்புகளை எழுதியனுப்பினால் 'அச்சாகிக் கொண்டிருக்கும் புத்தகங்கள்' என்ற தலைப்பில் அவற்றைப் பற்றி முன்கூட்டியே செய்தி வெளியிடுவோம்.

- ஒவ்வொரு மாதமும் பதிப்பாளர்கள் சார்பில், பதிப்பகங்களுக்கு பிரச்சினைகள் பற்றி வெளியிட விருக்கிறோம். பதிப்பகத் தொழிலிலுள்ள தாங்கள் இது பற்றி கட்டுரைகள் எழுதியனுப்ப வேண்டுகிறோம்.

- புத்தகத் தொழில் வளர்ச்சிக்கும், சிறந்த நூலக இலக்கி வளர்ச்சிக்கும் பாடுபடுவதை நோக்கமாகக் கொண்டு 'நூலகம் இலக்கியம்' மாத இதழுக்கு தொடர்ந்து மாதந்தோறும் விளம்பரம் தந்து ஆதரிக்க வேண்டுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

- 'நூலகம் இலக்கியம்' வளர்ச்சி நிதிக்கு தாராளமாக நம் கொடை தந்து புதிய முயற்சிக்கு உதவ வேண்டுகிறோம்.

விளம்பர விகிதம்

முழு பக்கம் ரூ. 1000

அரை பக்கம் ரூ. 500

கால் பக்கம் ரூ. 250

பின் அட்டை ரூ. 2000

உள் அட்டைகள் ரூ. 1500

கலர் பிரிண்டிங் தனி

நூலக ஞானி

Dr. பா. பெருமாள

M.A., M.Lib.Sc., Ph.D.,

ஆசிரியர் ''நூலகம் இலக்கியம்''

மாத இதழ்

6, மு.வ. தெரு, அரும்பாக்கம்,

சென்னை - 600 0106.

போன் : 484 5034

ஆண்டு சந்தா : ரூ. 120/-

புரவலர் ரூ. 1000/- ஆயுள் சந்தா ரூ. 500/-

உடனே புரவலாக பணம் அனுப்பி உதவுங்கள்

பாடிப் பழகு

பேராசிரியர். தங்க சிகாமணி
57, சானகிராம் காலனி,
அரும்பாக்கம்,
சென்னை 106.

1. புள்ளி

புள்ளி ஒன்று வைக்கலாம்
புரிந்து கொண்டு வைக்கலாம்
தள்ளித் தள்ளி வைக்கலாம்
தக்க முறையில் இணைக்கலாம்.

2. சின்னக்கோடு

சின்னக் கோடு போடலாம்
சிறிது சிறிதாய் நீட்டலாம்
சிறிய தவறும் இல்லாமல்
சீக்கிர மாய் முடிக்கலாம்.

3. நேர்க்கோடு

நேர்க்கோ டொன்று போடலாம்
நிமிர்ந்து அமர்ந்து போடலாம்
கோடு நீண்டு போயினும்
கோணல் மாணல் தவிர்க்கலாம்.

4. படுக்கைக்கோடு

படுக்கைக் கோடு போடலாம்
படுக்கைப் போல ஆக்கலாம்
மிடுக்காய்க் கோட்டைப் போடலாம்
மேலும் மேலும் போடலாம்.

5. சாய்வுக் கோடு

சாய்வு கோடு வரையலாம்
சாயும் பலகை யாக்கலாம்
சாய்ந்து வரையப் பழகலாம்
சமயம் பார்த்து வரையலாம்!

ENGLISH HANDWRITING FOR PLEASURE



``I was ashamed of my handwriting. Let every young man and woman be warned by my example and understand that good handwriting is a necessary part of education."

- Mahathma Gandhi

திருக்குறள்

உரையாசிரியர் : கலைஞர் மு. கருணாநிதி

வள்ளுவரின் குறட்பாக்களுக்குப் புது மெருகூட்டி ஓவியமாகப் படைத்த கலைஞர் தற்போது 1330 குறள்களுக்கும் தமக்கே உரிய அழகு நடையில் சில வரிகளில் இந்நூலில் விளக்கம் அளித்துள்ளார்.

133 அதிகாரங்கள், அருஞ்சொற்பொருள் மற்றும் குறட்பாக்களின் முதற்குறிப்புகளின் அகர வரிசைகளும் நூலில் இடம் பெற்றுள்ளன.

மிகச் சிறப்பாக நவீன முறையில் அச்சிட்டு சமீபத்தில் வெளியான இந்நூல் தமிழன்பர்களுக்கு ஒரு பன்சுவை விருந்தாக அமையுமென்பதில் ஐயமில்லை.

'...இக்காலத் தேவையைச் சரியாக ஈடுசெய்ய வல்லதாய் எழுந்ததே கலைஞர் உரை என்னும் தெரிவுரையாகும்...

இக்காலத் தமிழன் ஒரு குறளைப் படித்தால் எதைத் தெரிந்து கொள்ள வேண்டுமோ அதை இற்றெனக் கிளந்து தெற்றெனக் காட்டுவதையே தம் உறுதியாகக் கொண்டுள்ளார்...

இந்நூலை வாங்கிப் படித்து மனதில் பதித்துக் கொள்வதோடு இயன்றவரை தேவையான இடத்திலெல்லாம் பின்பற்றுமாறும் நான் தமிழ்மக்களை அன்புடன் வேண்டுகிறேன்...'

பேராசிரியர் மா. நன்னன்
அவர்களின் பதிப்புரையிலிருந்து

XXX + 286 பக்கங்கள் (திருமகள் நிலையம்) ரூ. 60.00

கம்ப்யூட்டர்

வில்ஸ் கோப்பை கிரிக்கெட் போட்டி கையகலத் தட்டில்!

பார்ப்பதற்கு வட்டக் கண்ணாடித் தட்டு போல் தோற்ற மளிக்கும், ஐந்தேகால் அங்குல விட்டமுள்ள ஒரு டிஸ்க்கில், வில்ஸ் உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டிகள் அடக்கம். சி.டி. ரோம் (CD-ROM) என்ற பெயருள்ள டிஸ்க்குகள் இப்போது கம்ப்யூட்டர் உலகில் பிரபலமாகி வருகின்றன. சாதாரணமாக 5:25 அங்கு ஃபிளாப்பி டிஸ்க்குகளில் அதிகபட்சமாக 1.2 எம்.பி. (ஏறத்தாழ 12 லட்சம் எழுத்துக்கள்) தகவல்களைப் பதிந்து வைக்கிறோம். ஆனால் அதே அளவுள்ள சி.டி. ரோம் டிஸ்க்கில் 600 எம்.பிக்கும் அதிகமான தகவல்களைப் பதிய முடியும்.

Compact Disk - Read Only Memory என்பதன் சுருக்கமே CD-ROM என்பதாகும். அதாவது சி.டி. ரோம் டிஸ்க்குகளில் பதியப்பட்டுள்ள விவரங்களைப் படித்தறிய மட்டுமே முடியும். அவற்றைத் திருத்தவோ, அழிக்கவோ முடியாது. மேலும் சி.டி. ரோம் டிஸ்க்குகளைப் பயன்படுத்த, அதற்கெனத் தயாரிக்கப் பட்ட சி.டி. ரோம் டிரைவ்கள் தேவை. அவற்றிலும், இரட்டை வேகம், நான்கு மடங்கு வேகம், ஆறு மடங்கு, எட்டு மடங்கு வேகமுள்ள டிரைவுகள் கிடைக்கின்றன. வேகத்தைப் பொறுத்து டிரைவின் விலையும், அடங்கியுள்ள தகவல்களைப் பொறுத்து டிஸ்க்கின் விலையும் அமைகின்றன.

ஏறத்தாழ நாலாயிரம் ரூபாய்க்கு, குறைந்த வேகமுள்ள டிரைவ் கிடைக்கும். ரூ. 750 முதல் ரூ. 1200 வரையில், சிறந்த பயனுள்ள சி.டி. ரோம் டிஸ்க்குகளைப் பெறலாம். வில்ஸ் கோப்பை கிரிக்கெட் போட்டிகளின் தகவல்கள் அடங்கிய மல்ட்டி மீடியா சி.டி. ரோம் டிஸ்க் ரூ. 995/ க்குக் கிடைக் கிறது.

உங்களிடம் மல்ட்டி மீடியா கம்ப்யூட்டர் இருந்தால், இசையோடு, வர்ணணையோடு ஆட்டத்தின் முக்கிய ஸ்டில் களை உங்கள் கம்ப்யூட்டர் திரையில் காணலாம். ஒவ்வொரு ஆட்டத்தின் பேட்டிங், பவுலிங் பட்டியலை திரையில் காண லாம். அந்த ஆட்டத்தைப் பற்றிய கவாஸ்கரின் கருத்துரையை கணீரென்ற குரலில் கேட்கலாம்.

இத்தனை தகவல்களையும் அறிந்து கொள்ள நீங்கள் எத்தகைய கட்டளையையும் கம்ப்யூட்டருக்குக் கொடுக்க வேண்டாம். உங்கள் கம்ப்யூட்டரில் இணைக்கப்பட்ட மவுஸை அசைத்து, திரையில் நகரும் அம்புக் குறியை, குறிப்பிட்ட விருப்பத் தேர்வில் (Menu Options) வைத்து, மவுஸின் தலையில் தட்டி கிளிக் செய்தால் போதும். அனைத்து விவரங்களையும் திரையில் காணலாம்.

இந்த டிஸ்க்கினை, கவாஸ்கரின் சொந்த நிறுவனவமான, புரொஃபஷனல் மேனேஸ்மென்ட் குரூப் நிறுவனமும், டாட்டா இன்ட்ராக்டிவ் சிஸ்டம்ஸ் நிறுவனமும் இணைந்து வெளியிட்டுள்ளன. கிரிக்கெட் ரசிகர்களுக்கு நல்ல விருந்து இந்த டிஸ்க்.

இன்றைக்குக் கம்ப்யூட்டர் மூலமாகத் தெரிந்து கொள்ள முடியாத தகவல்களே, அறிந்து கொள்ள முடியாத அறிவியல் நுட்பமே எதுவும் இல்லையெனலாம். உலகின் அறிவுக் களஞ்சியம் அனைத்தையும் கையளவு டிஸ்க்கில் அடக்கிவிடுகிறார்கள்.

... ≈ ...

எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே!

மரம் : உயிர் இருக்கும் வளர்ச்சி இருக்கும். ஆனால் ஓர் இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்குத் தானாகப் பெயர்ந்து செல்ல முடியவில்லை. அதனால், இப்படிப்பட்ட இயல்பு உடைய பொருளுக்கு "மரம்" என்று பொருள். அதனால் தான் "மரம்" என்று பெயர் இட்டனர் மரத்திற்கு நம் முன்னோர்.

பக்கம் 27, 4/96 ரூ.5. ஓம் சக்தி ஆசிரியர்: நா. மகாலிங்கம்.

தமிழ்ப் புத்தகங்கள் விற்பனை

எல்லா எழுத்தாளர் களின் தமிழ்ப் புத்தகங்களை ஒரே இடத்தில் விற்பனை செய்ய ஏற்பாடு செய்ய வேண் டும் என்ற எண்ணம் பல ஆண்டுகளாக பலருக்கும் இருக்கிறது.

பெரிய புத்தக நிலை யங்களில் தமிழ்ப் புத்தகங்கள் விற்பனை குறைந்து கொண்டே இருக்கிறது. சென்னை புத்தக கண்காட்சியில் ஒருமுறை ஒரு கடை எடுத்து 3000 எழுத் தாளர்களுக்கு கடிதம் எழுதி சுமார் 50 பேரிடமிருந்து புத்தகங்கள் வாங்கி புத்தக உலகம் விற்பனை செய்தது.

பெங்களூரில் நடை பெற்ற அகில இந்திய புத்தக கண் காட்சியிலும் நூல்களை அவ்வாறே பெற்று விற்பனை செய்தோம்.

மதுரையில் நடந்த உல கத் தமிழ் மாநாட்டிலும் இவ் வாறே ஏற்பாடு செய்தோம்.

வெளி நாட்டிலிருந்தும் வெளி ஊர்களிலிருந்தும் வரு கிறவர்கள் எல்லா தமிழ்ப் புத்தகங்கள் ஒரே இடத்தில் கிடைக்கும்படி ஒரு கடையை யாராவது நடத்தக் கூடாதா என்று கேட்கிறார்கள்.

தமிழ்ப் பதிப்பாளர்கள் சங்கம் புதிய அரசிடம் பேசிதக்க ஏற்பாட்டினை செய்யலாம்.

கடந்த மாதம் நூலகம் இதழில் திரு. ராமலிங்கம் "Book Land' கடையில் எல்லா தமிழ் புத்தகங்களையும் விற்க ஏற் பாடு செய்துள்ளார் என்ற இனிய செய்தி கேட்டு மிகவும் மகிழ்ந்தோம்.

இதுபோன்ற கடைகள் வடசென்னை, மற்றும் மதுரை, கோவை போன்ற நகரங்களி லும் வரவேண்டும் என விழை கிறோம்.

தமிழ் பற்றுள்ள புதிய அரசு தமிழ்நாட்டில் வெளி யாகும் புத்தகங்களை விற் பனை செய்யும் அமைப்புகளை முக்கிய நகரங்களில் ஏற்படுத்த முன்வரவேண்டும்.

புத்தக உலகம் A.G.S மணி

நூறு நாட்களில் தமிழ் ஆட்சி மொழி அமைச்சர் தமிழ்க்குடிமகன் உறுதி

நூறு நாட்களில் தமிழ் ஆட்சிமொழியாக செயல்படுத் தப்படும். தமிழில் போதிக்கும் பொறியியல் கல்லூரியும், மருத்துவக் கல்லூரியும் விரை வில் துவக்கப்படும்,' என்று தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் தமிழ்க்குடிமகன் நேற்று நிருபர் களிடம் கூறினார்.

தமிழ் வளர்ச்சித் துறைக் கென இதுவரை தனி அமைச்சர் இருந்ததில்லை. புதிதாக பொறுப் பேற்றுள்ள தி.மு.க அரசு முதன் முறையாக தமிழ் வளர்ச்சித் துறைக்கு தனியாக ஒரு அமைச் சரை நியமித்துள்ளது. தமிழ் வளர்ச்சித் துறையில் முதலாவது அமைச்சராக பொறுப்பேற்றுள்ள தமிழ்க்குடிமகன் நேற்று மாலை கோட்டையில் நிருபர்களை சந்தித் தார். பேட்டியில் அவர் கூறியதா வது :

தமிழ் ஆட்சி மொழித் திட்டத்திற்காக கடந்த 1956ம் ஆண்டு அரசு உத்தரவு பிறப் பிக்கப்பட்டது. ஆனால், இதுவரை இத்திட்டம் செயல் படுத்தப்பட வில்லை.

தமிழ் மொழியை பயிற்று மொழியாகக் கொண்டு படித்து வருபவர்களுக்கு தமிழக அரசுப் பணி வேலைவாய்ப்பில் முன்னு ரிமை அளிக்க உத்தரவிடப்படும். இதனால், மற்ற மொழிகளில் பயின்றுவருபவர்களின் உரிமை எதுவும் பாதிக்காது. மேலும், தமிழ கத்தில் தமிழில் கணிப்பொறி பயன் படுத்துவதை தீவிரப்படுத்தப் படும். இதற்காக பன்மொழி கணினியை பயன்படுத்த நட வடிக்கை எடுக்கப்படும். அதே போல், தமிழ் மொழி டெலிபிரின் டர்களை அதிகப்படுத்துவோம். எல்லா மாவட்ட கலெக்டர் அலு வலகங்களிலும் தமிழ் மொழி டெலி பிரிண்டர்கள் வைக்கப்படும் முதற் கட்டமாக 20 தொலைவரி அலுவல கங்களில் தமிழ் தொலையச்சு அறிமுகப்படுத்தப்படும். இதன் மூலமாக அரசு வழி செய்திகள் தமிழ் தொலையச்சு மூலமாக அனுப்பப்படலாம்.

தமிழில் போதிக்கும் பொறி யியல் கல்லூரி மற்றும் மருத்துவத் கல்லூரிகளை விரைவில் துவக்க நடவடிக்கை எடுக்கப்படும். ஏற் கெனவே, பொறியியல் பாடங்கள் பல தமிழில் மொழி பெயர்க்கப் பட்டு வந்திருக்கின்றன. யாழ்ப் பாணத்தில் தமிழ் மொழியில் போதிக்கும் பொறியியல் கல்லூரி யும் மருத்துவக் கல்லூரியும் இருக் கிறது. எனவே, தமிழ் மொழியில் போதிக்கும் தொழிற்கல்லூரிகளை ஏற்படுத்துவதில் சிரமம் இருக்காது. அடுத்ததாக, இன்டர்நெட் என்ற அமைப்பின் மூலமாக பல்வேறு நாடுகளுக்கும் தமிழ் செய்திகள் அனைத்தும் அனுப்ப ஏற்பாடுகள் செய்யப்படும். தமிழ் அகழ்வாய்வு களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்போம்

இவ்வாறு தமிழ்க்குடிமகன் கூறினார்.

1996-97-இல் நூலகக் கல்வி பட்டப் படிப்பும் தமிழில் வரவேண்டும்

'தூங்கி வழியும்' நூலகங்கள்

நூலகர் இல்லா நூல கங்கள் என்ற தகவலையும் தினமணியே சில ஆண்டு களுக்கு முன் (1992_93) இரண்டு கால தகவலாக வெளியிட்டது.

தினமணி சென்னை பதிப்பு 14.3.1996 பக்கம் 4 இல் தூங்கி வழியும் நூலகங் கள் கட்டுரையை அன்பர் திரு அரா. பெரியசாமி வரைந் துள்ளார்.

நூலக உலகில் இப் பெயர் கொண்ட அன்பர் இருப்பதாகத் தெரியவில்லை

புனை பெயராகவும் இருக்கலாம்.

தூங்கி வழிவது நூலகங் கள் அல்ல. நூலகர்கள்தான் எனக் ாம்.

தமிழகத்தில் தமிழ் நூலக உணர்வு இல்லா நூல கச் சங்கம். நூலக கல்வி போதனை துறைகள்தான் இதற்கு பொறுப்பாகும்.

பின்னர் விரிவாக விம ரிசனம் எழுதுவோம்.

'தூங்கி வழியும்' நூலகங்கள்

கல்வியில் சிறந்த தமிழ் நாட்டிலுள்ள 14 பல்கலைக் கழகங்களில் பத்து பல்கலைக் கழகங்களில் "நூலகர்" பதவி நிரப்பப்படாமல் காலியாகவே தங்கு தடையின்றி கால வைக்கப்பட்டுள்ள இதுதான் நூலகங்களுக்கு நாம் தரும் மரியாதை. சென்னைப் பல்கலைக் கழகத்தில் சென்ற மூன்று ஆண்டுகளாக நூலகர் பதவியும், பத்து ஆண்டு களாக ஐந்து உதவி நூலகர் பதவிகளும் காலியாகவே வைக்கப்பட்டுள்ளன. மேலும் 10 ஆண்டுகளாக இந்தப் பல் கலைக் கழக நூலகங்களுக்கு வேண்டிய, நூலகப் பட்டம் பெற்ற பணியாளர்கள் நிய மனம் செய்யப்படாததோடு, இருக்கின்ற நூலகப்பட்டப் பணியாளர்களுக்கு நியாய மாகத் தரவேண்டிய பதவி உயர்வும் தரப்படாமல் அவர் களின் வாழ்க்கை முன்னேற் றத்தினைத் தடுத்து, "சாதனை" புரிந்து வரு கிறது.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஒரு விரிவுரையா ளர் எட்டு ஆண்டுகள் பணி யாற்றினால் போதும், எந்த விதத்தடையுமின்றி இணைப் பேராசிரியராகப் பதவி உயர்வு பெற்று விடுவார், அதேபோல் எட்டு ஆண்டு கள் இணைப் பேராசிரியரா கப் பணியாற்றியவர், உடனே பேராசிரியராகப் பதவி உயர்வு பெற்றுவிடுவார். அதேபோல ஆசிரியரல் லாத பணியாளர்களுக்கும்

நிர்ணய பதவி உயர்வு உண்டு. அவரே எட்டு ஆண்டு களுக்குப் பிறகு பிரிவு அதி காரியாகவும் எந்த விதத் தங்குதடையுமின்றி பதவி உயர்வு பெறுவார்.

ஆனால் கலையியலி லும், நூலக வியலிலும் பட் டம் பெற்று நூலகத் துணை வர்களாகவும் அதே நூலக வியலில் மேற்பட்டப்படிப்பு பெற்று நூலகத் தொழில் நுட் பத் துணைவர்களாகவும் நூலகங்களில் பணியாற்று கிறவர்கள் அதே பதவிகளில் 15, 20 ஆண்டுகளாக பதவி உயர்வின்றி அழுத்தப்பட்டு வைத்திருக்கும் பரிதாபநிலை தொடர்ந்து இருந்து வரு கிறது.

சென்னைப் பல்கலைக் கழக நூலகத்திலும் மற்றும் மூன்று வளாக நூலகப் பணியாளர்கள் நியமிக்கப்பட வில்லை. அமர்ந்து அமைதி யாகப் படிக்க விரும்பும் ஆய் வாளர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் செய்து தரப்படவில்லை. மற்ற கல் லூரிகளுக்கும், புதிதாகத் தொடங்கப் பெறும் கல்லூரி களுக்கும் நூலகம், பணி யாளர், மற்றும் வசதிகள் பற்றி விதிகளை அள்ளி வீசும் சென்னைப் பல்கலைக்கழகம் நூலகங்களில் அந்த விதி முறைகளைச் செயல்படுத்து கிறதா? நேர்மையும், நியாய உணர்வும் கொண்ட ஆட்சி மன்றக் குழுதான் இந் தக் கேள்வியைக் கேட்க வேண் டும்.

சென்னையைத் தொ டர்ந்து, திருச்சி பாரதி தாசன் பல்கலைக்கழகத் திலும் எம்.ஏ., எம்.எல். ஐ.எஸ்., எம்.பில்., பட்டம் பெற்ற நூலக தொழில் நுட்ப உதவியாளர்கள், தாங்கள் நியாயமாகப் பெறவேண்டிய உதவி நூலகர் பதவியினைப் பெற இயலாதவாறு, விதி முறைகளைக் காரணம் காட்டி அழுத்தி, அமுக்கி வைக்கப் பட்டுள்ளார்கள். மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம் மட்டும் நூலக தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு, தக்க காலத்தில் தரவேண்டிய உதவி நூலகர் பதவிகளைத் தந்துள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள கல் லூரி நூலகங்கள், சிலவற் றைத்தவிர, மற்றவை பெயர ளவிலேதான் செயல்படுகின் றன. தக்க நூலகவியல் பயிற்சி பெற்ற நூலகர்கள் அங்கு பணியாற்றினாலும், அவர்கள் தங்கள் திறமை களைப் பயன்படுத்தி, நூல கத்தைச் சீராக்கத் தக்க வாய்ப்புகளையும், வசதி களையும் கல்லூரி நிர்வாகங் கள் செய்து தருவதில்லை. விதிகளின் படி நூலகர்கள் ஆசிரியர்களுக்கு இணையாக இருந்தாலும், அவர்களுக்குத் தரவேண்டிய தகுதியைத் தராமல் ஒதுக்கி வைக்கப்படு

வதால் அவர்கள் உற்சாகமாக கல்லூரிகளில் செயல்பட இயலவில்லை. கல்லூரி நூலகங்களில் தரமான, நூல்களை வாங்கப் போதிய நிதி ஒதுக்கப்படுவதில்லை. கல்லூரிகளுக்கு ஒதுக்கப்படும் நிதியில் துண்டு விழுந்தால் அதற்கு முதல்பலியாவது நூலகம்தான்.

பொது நூலகத்துறை நூலகர்களின் நிலைமை மிக மிகப் பரிதாபம். பட்டப் படிப்போடு, நூலகவியலிலும் பட்டப்படிப்புப் பெற்று பொது நூலகத் துறையில் நூலகராகச் சேர்பவர்கள் தொடர்ந்து 20, 25 ஆண்டுகள் எந்தவித பதவி உயர்வுமின்றி அதே பதவியில் அழுத்தப் பட்டு, வைக்கப்பட்டிருக்கும் நிலைமை வேறு எந்தப் பொதுத்துறையிலும் இல்லாத நடைமுறையாகும்.

தமிழ்நாட்டில் வீட்டு வரி செலுத்துவோர் அனைவரும் நூலகவரியும் செலுத்துகிறோம். ஆனால் அவற்றை வசூலிக்கும் ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சிகள் உடனுக்குடன் அந்தத் தொகையினைப் பொது நூலகத் துறைக்கு அனுப்பி வைக்காததால் போதிய நிதியின்றி பொது நூலகத்துறை எந்தத் திட்டத்தையும் சரிவர நிறைவேற்ற இயலாமல் திணறிக் கொண்டிருக்கிறது. 1500-க்கும் மேற்பட்ட பொது நூலகத் துறை கிளை நூலகங்களுக்கு ஒரு நூலில் 500 பிரதிகள் மட்டும் வாங்கினால் மற்ற ஆயிரம் கிளை நூலகங்களில் தரமான நூல்கள் எப்படிப் போய்ச் சேரும்? ஆகவே நூலகவரித் தொகையை உடனுக்குடன், பொது நூலகத் துறைக்கு அனுப்பிவைக்க, தமிழ் நாடு அரசு உடனடியாக ஒரு சிறப்பு ஆணையினைப் பிறப்பித்தால்தான், பொது நூலகத்துறையைச் சேர்ந்த கிளை நூலகங்கள் செம்மையாகச் செயல் பட இயலும்.

தமிழ் நாட்டிலுள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகளில் நான்கு பள்ளிகளில் தான் முழுநேர நூலகர்கள் நியமிக்கப் பட்டுள்ளார்கள். உடற்பயிற்சி ஆசிரியர், ஓவிய ஆசிரியர், ஆசிரியர்கள் இருக்கும் எல்லா மேல் நிலைப் பள்ளிகளிலும், நூலகர் மட்டும் கிடையாது. பல மேல்நிலைப் பள்ளிகளில் நூலகம் என்பது பெயரளவில் தான் செயல்படுகிறது. சில பீரோக்களில் புத்தகங்களைப் பூட்டி வைத்திருப்பார்கள். அதற்கு ஒரு ஆசிரியரைப் பொறுப்பாக்கி, அதற்குச் சொற்பத் தொகையினை மாதச் சம்பளத்திற்கு மேல் தருவார்கள்.

புத்தகங்கள் காணாமல் போய்விட்டால், அதற்கான தொகை அந்த பொறுப்பாளர் (ஆசிரியர்) ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்

மாதலால், அவர் நூல்களை யாருக்கும் தராமலிருப்பதில் முழுக்கவனம் செலுத்த வேண்டிய கட்டாய சூழ் நிலைக்குத் தள்ளப்படுகிறார். இச்சூழ்நிலையில் பள்ளிகளில் ஆசிரியர்களுக்கும், மாணவர் களுக்கும் புதிது புதிதாக நாள் தோறும் வெளிவரும் நூல் களைப் படிக்கின்ற வாய்ப்பு எங்கே இருக்கிறது? தமிழ் நாட்டில் மாணவர்களுக்கு நூல்களைப் படிக்கும் ஆர் வத்தினை முளையிலேயே கிள்ளி எறிந்து கொண்டிருக் கிறோம்.

வளர்ந்து வரும் நாடு களின் அறிவியல் மற்றும் எல்லாத்துறை முன்னேற்றத் திற்கும் அடிப்படைக் கார ணம், அங்கு நூலகங்கள் திட்டமிடப்பட்டுச் செம்மை யாகச் செயல்படுவதுதான். அகில இந்திய அளவில் நடை பெறும் வினா – விடை நிகழ்ச்சிகளில், நமது மாண வியர்கள் எத்தனை முறை முதலிடம் பெற்றார்கள் என்ற புள்ளி விபரம் நமது இன் றைய நிலையைத் தெள்ளத் தெளிவாகக்காட்டும்.

அதேபோல் அகில இந்தியத் தேர்வுகளில் நமது மாணவர்களின் சாதனை, எந்த நிலையில் இருக்கிறது என்பதை நாம் அனைவரும் சிந்திக்க வேண்டும். சராசரி யாக இன்று நமது மாணவ – மாணவியர்கள் தினமும் நூல் களைப் படிக்கின்ற நேரம் மிக மிகக் குறைவு. அவர்களைப் படிக்க விடாமல், அரசியல், கலை, சினிமா, பொழுது போக்கு என்ற பலமுனைத் தாக்குதல்களை நடத்திக் கொண்டிருக்கிறோம்.

பொதுவாகத் தமிழ் நாட்டில் பணம் கொடுத்து தரமான நூல்களை விலைக்கு வாங்கும் பழக்கத்தை நாம் கைக்கொள்ளவில்லை. ஒரு நூலின் 1200 பிரதிகளை அச் சடித்து வைத்துக் கொண்டு, அதைவிற்க 5,6 ஆண்டுகள் தத்தளிக்கும் பரிதாப நிலை மைதான் இன்றைய தமிழ் நாட்டின் நிலைமை.

மாதம் ஒரு நூல் வாங்கி, ஒவ்வொரு வீட்டி லும் ஒரு சிறு நூலகம் அமைக்கப்பட வேண்டும். குழந்தைகளுக்கு நூல்களைப் படிக்கும் பழக்கத்தினை உரு வாக்க வேண்டும். கல்வி நிறு வனங்களில் நூலகங்களைச் செம்மைப்படுத்த தகுந்த நூல கர்களை நியமித்து, படிக்கும் ஆர்வத்தினை முறையாக வளர்க்க வேண்டும்.

நாம் நூலக வரியாகத் தரும் பணம் உடனுக்குடன் பொது நூலகத்துறைக்கு அனுப்பப்பட்டு, அதன்மூலம் நல்ல நூல்கள் வாங்கப்பட வேண்டும். அதனால் படிக் கின்ற ஆர்வலர்கள், ஆய் வாளர்களின் தொகை பெரு கும். படிக்கின்ற நாடுதான் முன்னேறும்.

பதிப்பாளர் வரலாறு

போராடி வெற்றி பெற்றேன்

(1943-ல் சின்ன அண்ணாமலையின் தமிழ்ப் பண்ணையில் நாற்பது ரூபாய் சம்பளத்துக்கு வாழ்க்கையைத் தொடங்கிய அருணன் படிப்படியாக உயர்ந்து, சொந்தமாக அருணோதயம் பதிப்பகத்தை நிறுவி இதுவரை ஓராயிரம் வெளியீடுகளுக்கு மேல் கொண்டு வந்து, தரமான - நேர்மையான பதிப்பாளர் என்ற அந்தஸ்தைப் பெற்றுள்ளார். இந்த நிலையை அடைவதற்கு அவருடைய விடாமுயற்சியும் கடின உழைப்பும் முக்கியமான காரணங்கள். தன் வாழ்க்கை நிகழ்ச்சிகளை அவர் இங்கே நினைவு கூர்கிறார்)

''சின்ன அண்ணாமலையின் சில காலமே பணியாற்றினாலும் நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளையவர்களின் தொடர்பு எனக்கு அங்கேதான் கிடைத்தது. கவிஞர்களுடன் தொடர்பு கொண்டு உரையாடும் வாய்ப்புகள் என்னுள் இலக்கிய ஆர்வத்தையும் தமிழறிவையும் தூண்டி விடத் துணை செய்தன. நல்ல இலக்கியங்களைத் தேடிப் பிடித்துப் படிக்கும் ஆர்வமும் வளர்ந்தது.

சொந்தமாகத் தொழில் செய்து வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற ஆர்வத்தில் ஒரு நண்பரின் ஆதரவோடு 'புத்தகாலயம்' என்ற புத்தக வெளியீட்டு நிறுவனத்தைத் தொடங்கி வைகைச் சுட்டுக் கொண்டேன். தொடர்ந்து புத்த காலயத்தை நடத்த முடியாத சூழ்நிலையில் முல்லை முத்தையா அவர்களின் அழைப்பை ஏற்று முல்லைப் பதிப்பகத்தில் வேலைக்குச் சேர்ந்தேன். சம்பளம் அறுபது ரூபாய். புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் நூல்களை முல்லைப் பதிப்பகம் வெளியிட்டு வந்தது. அந்த வகையில் கவிஞரின் தொடர்பு கிடைத்தது. அது மட்டுமல்ல, நான் மதுரையில் பணியாற்றியபோது கவிஞர் மதுரைக்கு வந்தால் முல்லைப் பதிப்பகத்தில்தான் தங்குவார். அவரோடு நெருங்கிப் பழகுகிற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. கவிஞரைத் தேடி வருகிற தி.க.பிரமுகர்களின் அறிமுகமும் கிடைத்தது. அவர்களில் எம்.ஆர். ராதாவும் ஒருவர். அவர் என்னிடம் பாரதிதாசன் கவிதைகளை மனப்பாடம் செய்து புத்தகம் வாங்க வருகிறவர்களிடம் சொல்லச் சொல்லுவார். அப்படி மனப்பாடம் செய்த புரட்சிக் கவிஞரின் கவிதைகளை பின்னாளில் நான் காமராஜருக்கு ஆதரவாகப் பொதுக் கூட்டங்களில் பேசும்போது எடுத்துச் சொல்லுவேன். இதைப் பார்த்து பலர் நான் ஒரு கவிஞர் என்றே நினைத்து விட்டார்கள்!

நூல் வெளியீடு தொடர்பான நுணுக்கங்களை நான் முல்லைப் பதிப்பகத்தில் கற்றேன். அங்கேயும் அதிக காலம் நீடிக்க வில்லை. வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்று முடிவெடுத்து எழுத்தாளன் ஆனேன். குமரன்,

செட்டிநாடு, உதயம் என்று அப் போது வெளிவந்து கொண்டி ருந்த இதழ்களில் என்படைப்பு கள் அரங்கேறின. கதை, கட் டுரை, கவிதை என்று நிறைய எழுதினேன். 1995 என்று நினைக்கிறேன். ஹரிச்சந்திரா, விநாயக சதுர்த்தி போன்ற திரைப்படங்களுக்கும் பாடல் எழுதினேன்.

ஓரளவுக்குப் பிரபல மானதும் எல்லா எழுத்தாளர் களுக்கும் வருகிற ஆசை எனக் கும் வந்தது. கவிஞர் குயிலன், இளங்கோ பதிப்பகம் சொக்க லிங்கம் இவர்கள் துணையோடு 'தென்றல்' பத்திரிகையைத் தொடங்கினேன். நாங்கள் போட்ட மூலதனம் ஆளுக்கு இருநூற்றி ஐம்பது ரூபாய்! கவி யரசு கண்ணதாசன் தொடர்பு எனக்குக் கிடைத்தது. முதல் இதழிலேயே 'பீலிவளை' என்ற சிறுகதையை அவர் தென்றலில் எழுதினார்.

தரமான இலக்கியப் பத்திரிகை என்ற பெயரை வாங்கித் தந்த தென்றல் பொரு ளாதார விஷயத்தில் எங்களைக் காலை வாரிவிட்டது. தென் றலை மூடிய பிறகு வேறு சில பத்திரிகைகளில் பணியாற்றி னேன். ஆனால் எந்த நிறுவன மாக இருந்தாலும் ஒரு ஆறு மாத காலத்திற்கு மேல் நான் அங்கு நிலைப்பதில்லை. விதி விலாக்காக சேலத்திலிருந்து வெளியான 'மந்திரி' என்ற பத்திரிகையில் ஓராண்டு காலம் பணியாற்றினேன். கவியரசோடு என் நட்பு தொடர்ந்து கொண்டி ருந்தது.

திரும்பவும் தென்றலை ஆரம்பிக்க கண்ணதாசன் பிரியப் பட்டார். நான் நிர்வாகியாகவும் அவர் உரிமையாளர், ஆசிரி யராகவும் தென்றல் திரும்பவும் தவழத் தொடங்கியது. அந்த நாளிலேயே கண்ணதாசன் எழுத்து நடைக்கு நல்ல வர வேற்பிருந்தது. சின்னச் சின்ன வாக்கியங்களில் முத்துக் கோர்ப் பதுபோல் வார்த்தைகளைக் கோர்த்து எழுதுவார். திரும் பவும் தென்றல் ஆரம்பித்த பிறகு அவர் மாடர்ன் தியேட் டர்ஸ் படங்களுக்குப் பாடல் எழுத ஆரம்பித்தார். அதற்காக அடிக்கடி சேலம் போய்விடு வார். அங்கேயிருந்து பத்திரி கைக்கு எழுதி அனுப்புவார். நான் முழுப்பொறுப்பு எடுத்துக் கொண்டு செயலாற்றி வந்தேன். ஏ.கே.வில் வம், கே. கபிலன் போன்றவர்கள் முதலில் தென்றி லில்தான் அறிமுகமானார்கள். இன்றைய பிரபல திரைப்பட இயக்குநர் எஸ்.பி.எம். கூட தென்றலில்தான் முதலில் பணி யாற்றினார்.

புத்தக வெளியீட்டு ஆசை மீண்டும் எதிர்ப்புத் தெரிவித்தவர் கண்ணதாசன் தான். அதைவிட பக்கோடா வியாபாரம் செய்யலாம், முதலா வது மிஞ்சும் என்று சொன்னார். சுற்றம், நட்பு என்று எல்லாத் தரப்பிலிருந்தும் எழுந்த எதிர் ப்பினைப் பொருட்படுத்தாமல் நான் அருணோதயம் என்ற பெயரில் புத்தக வெளியீட்டு நிறுவனத்தை ஆரம்பித்தேன். முன்பு நான் சிலகாலம் காரைக் குடியில் இருந்தபோது நடத்தி வந்த 'அருணன்' பத்திரிகையில் ஏற்பட்ட நட்டத்தைச் சரிக்கட்ட மனைவியின் நகைகளையெல் லாம் விற்க வேண்டியதாகி விட்டது. அருணோதயத்தைத் தொடங்கிய போது கழற்றிக் கொடுக்க அவளிடம் நகை

எதுவுமில்லை. அவள் பெயரில் இருந்த ஷேர் சர்டிபிகேட்டுகளை அடமானம் வைத்து ஐந்நூறு ரூபாய் முதலில் அருணோதயத்தை ஆரம்பித்தேன்.

அந்த நாளில் கண்ணதாசன் படைப்புகள் எதுவும் புத்தகமாக வெளிவராதது எனக்குப் பெரிய குறையாக இருந்தது. அதனால் கவியரசரின் சிறுகதைகள் சிலவற்றைத் தொகுத்து 'ஈழத்து ராணி' என்று புத்தகமாகப் போட்டேன். ஒரு ரூபாய் விலை! தொடர்ந்து அவருடைய இதர படைப்புகளையும் வெளியிட்டேன். கையிலிருந்த முதல் காலியாகிவிட்டது. வீடு முழுக்கப் புத்தகங்கள். இவற்றை எப்படி விற்பது? அந்த நாட்களில் ஆயிரம் பிரதிகள் போட்டால் அவை விற்பதற்கு ஐந்தாறு ஆண்டுகளாகும். புத்தகங்களைப் பையில் எடுத்துக் கொண்டு கடை கடையாகி ஏறி இறங்குவேன். அதிகமாகக் கழிவு கொடுத்து ரொக்கத்துக்குப் புத்தகங்களை விற்று அந்த வருமானத்தில் வாழ்க்கையை நடத்த வேண்டிய சூழ நிலை.

எந்த நெருக்கடி வந்தாலும் வேறு தொழிலுக்கு மாறுவதில்லை என்ற வைராக்கியத்தோடு பதிப்பகத்தைத் தொடர்ந்து நடத்தினேன். பிரபல அறிஞர்களின் படைப்புக்களைத் தொடர்ந்து நடத்தினேன். பிரபல அறிஞர்களின் படைப்புக்களைத் தொடர்ந்து வெளியிட்டேன். அதில் குறிப்பிடத்தக்கவர்கள் - பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரை, பேராசிரியர் நா. பாண்டுரங்கன் போன்றவர்கள்.

வெறும் லாப நோக்கத்தோடு பதிப்பகத்தை நடத்தியிருந்தால் மக்களின் மலிவான ரசனைக்குத் தீனி போடுகிற புத்தகங்களை வெளியிட்டு பணம் பண்ணியிருக்கலாம். ஆனால் நான் அப்படிச் செய்ய விரும்பவில்லை. உன்னதமான இந்தத் தொழிலின் தரத்தைப் பாதிக்காமல் நடத்த வேண்டும் என்ற குறிக்கோளில் உறுதியாக இருந்தேன்.

என்னுடைய உழைப்பும் முயற்சிகளும் வீண் போகவில்லை. காலப்போக்கில் அவை பயன் தர ஆரம்பித்தன. நட்டம் வரும் என்று தெரிந்தும் சில புத்தகங்களைத் துணிந்து வெளியிட்டேன்.

அப்படி ஒரு புத்தகம் துமிலன் எழுதிய 'காவல் துறையில் கதை'. ஓராண்டு காலம் முயற்சி செய்து பயனுள்ள பல குறிப்புகளைச் சேகரித்து இதை அவர் எழுதினார். போட்ட முதலில் கால் பங்கு கூடத் தேறவில்லை! இன்று வரை இந்தப் புத்தகம் மறு பதிப்பைப் பார்க்கவில்லை! பழந்தமிழ் இலக்கியங்களைக் கதை வடிவில் மலிவான விலைக்கு வெளியிட்டேன். நாடக இலக்கியத்தை மக்களிடையே அறிமுகப்படுத்த தரமான நாடகங்களை 90 காசு விலைக்குப் புத்தகமாக வெளியிட்டேன். அப்போது கூட புத்தகம் வாங்க வருகிறவர்கள் 'கம்சன்' எவ்வளவு தர்றே? என்று கேட்பார்கள். ஒரு ரூபாய் விலையில் கம்சனும் கிருஷ்ணனும் எப்படிக் கொடுப்பது?

இன்று நிலைமை எவ்வளவோ மாறி இருக்கிறது. நிறைய பதிப்பகங்கள் தோன்

நியுள்ளன. மக்களிடையே புத்தகங்கள் வாங்கிப் படிக்கும் ஆர்வம் பெருகியுள்ளது. இதற்கெல்லாம் காரணகர்த்தாக்களாக முன்னோடிகளாக இருந்தவர்களை நினைவு கூர்வது அவசியம். எளிமையாக வாழ்ந்து பதிப்பகத் துறைக்குச் சேவை செய்த அல்லயன்ஸ் குப்புசாமி ஐயர், அதிகமாகப் பணம் செலவிட்டு வெளிநாட்டுத் தரத்துக்குப் புத்தகங்களை வெளியிட்ட தமிழ்ப்பண்ணை சின்ன அண்ணாமலை, அளவாகச் செலவு செய்து தரமான நூல்களை வெளியிட்ட முல்லை முத்தையா போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

அருணோதயம் வெளியீடுகள் ஆயிரத்தைத் தாண்டி விட்டன. இவற்றில் குழந்தைகளுக்கான புத்தகங்கள் மட்டும் நானூறு. ஒரே சமயத்தில் இருபத்தி ஐந்து வெளியீடுகள், பல வெளியீட்டு விழாக்கள் - என்று அருணோதயம் கண்டுள்ள வளர்ச்சி மனநிறைவைத் தருகிறது. கையில் காசில்லாத ஆரம்ப நாட்களிலும் சரி, இன்றும் சரி ஒரு விஷயத்தில் நான் உறுதியாக இருக்கிறேன். புத்தகம் அச்சாகி மேஜைக்கு வந்ததும் எழுத்தாளருக்குச் சேர வேண்டிய மொத்த ராயல்டி தொகைக்கும் உண்டான செக் ரெடியாக இருக்கும்!

1943-ல் தொடங்கிய என் தமிழ்ப்பணியில் ஒரு பத்தாண்டு காலம் எழுத்தாளனாகக் கழிந்தது போக மீதமுள்ள காலத்தை பப்ளிஷராகக் கழித்திருக்கிறேன். வேறு எந்தத் தொழிலில் ஈடுபட்டிருந்தாலும் இந்த அளவு ஆத்மதிருப்தி நிச்சயமாகக் கிடைத்திருக்காது!''

வல்லிக்கண்ணன் வாழ்த்து

அன்புள்ள ''நூலக ஞானி அவர்களுக்கு,

வணக்கம். நூலகம் இலக்கியம்' நூலகம் சம்பந்தமான சகல தகவல்களையும் தருவதில் அக்கறை காட்டிவருவது போற்றுதற்குரியது. ஏப்ரல் இதழில் 'டாகுமெண்டேஷன்' பற்றிய கட்டுரை ஆழமானது; பயனுள்ள விவரங்களைத் தருகிறது. பல புதிய புத்தகங்களின் அறிமுகம், கன்னிமாரா நூல் நிலையம் பற்றிய கட்டுரை, 'தமிழ்ப் புத்தகக் கடல் முதலியன வாசகர்களுக்குப் பெரிதும் உதவக் கூடியவை. ஆலந்தூர் மோகனரங்கன் எழுதிவரும் 'நூலகத் தந்தை அரங்கநாதன் வாழ்க்கைக் காவியம் 'சிறப்பாக இருக்கிறது.

உங்கள் அனுபத்தோராவது நிறைவு விழா கண்ணாடி + ஊஞ்சல் உற்சவ சேவையாக இனிய முறையில் கொண்டாடப்பட்டது மகிழ்ச்சி தருகிறது. நீங்கள் நீண்ட ஆயுளும் ஆரோக்கிய வாழ்வும் பெற்று உங்கள் இலட்சியப் பணியில் வெற்றி கரமாக முன்னேறக் காலம் துணைபுரியட்டும். வாழ்த்துக்கள். அன்பு.

- வல்லிக்கண்ணன்

20-5-1996
சென்னை - 5.



அருணோதயம்

அருணன்.

* Edited printed and published by NOOLAGAGNANI Dr. Pa. PERUMAL M.A., M.Lib sc, Ph.d., From 6, Mu. Va. Street, Arumbakkam, Madras - 600 106. ✆ :4848 50 34. * Printer P. AYYASAMY at Thirumalai Deivam Art Printers 14, Yadaval Street, Aminjikarai, Madras - 600 029. * Laser by Galaxy Computer System. ✆ : 483 25 71 *

Please send Annual Subscription Rs: 120.

நூலக ஞானி டாக்டர் பா. **பெருமாள்** - திருமதி **இந்திரா** மணிவிழா காட்சிகள்.

நூலக ஞானி டாக்டர் பா. **பெருமாள்** - திருமதி **இந்திரா** மணிவிழா காட்சிகள்.

NOOLAGAM ILAKKIYAM Tamil Monthly May, 1996
Regd No. TN / MS / N / 922 R.Dis 4441 / 95.E. Phone No : 484 5034



கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன்

பண்பாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் தமிழ்க் குடிமகன்.